ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18] ப்ரபவ ஹு, கார்த்திகை மீ [ஸஞ்சிகை 2

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥
['ஸ்ரீ பாகவதம். 1-9 23]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

அத்வைத விசிஷ்டாத்வைத ஸித்தாந்தங்களின் ஸங்க்ரஹ வினாவிடை*

இந்த விசிஷ்டாத்வைத ஸபையில் அடியேனை, விசிஷ்டாத்வைதத்துக்கும் அத்வைதத்துக்கும் இருக்கிற தாரதம்யத்தை உபந்யஸிக்க வேணுமென்று பெரிய வித்வாங்கள் முன்பு ஸபாத்யக்ஷர்களும் பெரிய மநுஷ்யர்களும் கேட்டுக்கொண்டபடியால், அடியேனும், "குணதோஷௌ விதுஷாம் ந ஸாயாஸம் உதேத்ய ப்ரயோக விஜ்ஞாதம்" என்கிறபடி அடியேனுக்கு ஆசார்ய

* இது, 14-10-27-ல் திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் ஸந்நிதியில் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் உத்ஸவத்தில் நடைபெற்ற விசிஷ்டாத்வைத ஸபையில் புதுக்கோட்டை தாநாதிகாரி நூலில் வங்கீபுரம் வித்வாந் ரங்காசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

னிடமிருந்து க்ரஹித்ததை ஸபையில் கொஞ்சம் தெரியப்படுத்த ஆவலுண்டாகி, "ஸபாயாம் ஸ்வஸமக்ஷஞ்ச கார்யோ ஸ்வப்ரதீயதா" என்கிற படியே சொல்லத்தான் வேணுமென்று "மத்த: ஸ்ருதம் ந தோஷாய" என்று நினைத்துத் தெரிந்தமட்டில் உபந்யஸிக்கிறேன். அதில் ஏதாவது குணபாகம் இருந்தால் அதை மாத்ரம் வெளிப்படுத்தவேணுமே தவிர, துர்க்குணத்தை அடக்கிக்கொள்ள வேணுமென்று, "குணதோஷௌ புதோ க்ருஹ்ணந் இந்துக்ஷ்வேடாவிவேச்வர: | சிரஸா ச்லாகதே பூர்வம் பரம் கண்டே நியச்சதி ||" என்று சாஸ்த்ரமானதால் ஸபையை ப்ரார்த்திக்கிறேன்.

வெகு காலத்துக்கு முந்தி, ப்ரத்யக்ஷமொன்றுதான் ப்ரமாணம் என்றும், கண்ணுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை யென்றும், பரலோகமே கிடையாதென்றும், "கிண்வாதிப்யோ மதசக்திவத்" வெற்றிலை பாக்கு சுண்ணும்பு இம்மூன்றையும் தனியாக உபயோகப்படுத்தினால் வ்யாதி உண்டானாலும், அவைகளைச் சேர்த்து உபயோகித்தால் சிவப்பான நிறம் மதம் இவை முதலியன உண்டாகின்றனபோல், பூமி ஜலம் தேஜஸ் இம்மூன்றும் சேர்ந்தால் சரீரமாகி, அதற்குப் பேசும்படியான சக்தி முதலியன உண்டாகின்றன வென்றும் சார்வாகர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அவை தனியாகப் போய்விட்டால் சரீரம் ஆத்மா ஒன்றுமில்லை யென்பதை "பஸ்மீபூதஸ்ய தேஹஸ்ய புநராகமநம் குத: | அக்நிஹோத்ரம் த்ரயோ வேதா: த்ரிதண்டம் பஸ்மகுண்டநம் | புத்திபௌருஷஹீநாநாம் ஜீவிகேதி ப்ருஹஸ்பதி: | ருணம் க்ருத்வா க்ருதம் பிபேத் | யாவஜ்ஜீவம் ஸுகம் ஜீவேத்" என்று சார்வாக மதமே வெளியிட்டு வந்தது. பிறகு "ச்ருதி: ப்ரத்யக்ஷமைதிஹ்யம் அநுமாநம் சதுஷ்டயம்" என்கிற வேதத்தைக் கொண்டு ப்ரத்யக்ஷம் அநுமாநம் ஆகமம் முதலானவைகள் கூட ப்ரமாணமென்று நினைத்து, அதிலும் "ந பூமிர் ந தோயம் ந தேஜோ ந வாயுர் ந கம் நேந்த்ரியம் வா ந தேஷாம் ஸமூஹ: | அநைகாந்திகத்வாத் ஸுஷுப்த்யேகஸித்த: ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம்" என்று ஆத்மாவானது சரீரமுமன்று, இந்த்ரியங்களுமன்று, மநஸ்ஸுமன்று, ப்ராணனுமன்று என்று ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்தாபித்து, அதைத்தான் முக்தனான பிறகு ப்ருஹ்மமென்று சொல்லுவதென்றும், அந்த விஷயமான ஜ்ஞாநத்தைத்தான் "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்று ஆரம்பித்து ஸூத்ரகாரர் சொன்னார்களென்றும் நிச்சயித்தார்கள். பிறகு நம்முடைய பாஷ்யகாரர், 'ஆத்மா வென்பது ஒவ்வொரு சரீரத்திலும் வேறுபட்டது; "ஜீவஸ்து ப்ரதிசரீரம் பிந்ந:" என்று தார்க்கிகர்களும் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். நித்யனையும், அறிவுள்ளவனையும், ஒருவனையும், [illegible]க்க வல்லவனையும் இருக்கிறவன்தான் ப்ருஹ்மமென்றும் பரமாத்மா வென்றும் சொல்லப்பட்டது. "நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந் | ஸம்ஸார ஸ்வஸம்ஹர்த்தாநாம் ஸர்வதேவோ ஜக்ந திஷ்டதி" என்கிற பல உபநிஷத்துக்களாலும் கீதையினாலும் கண்டுபிடிக்கப்பட்டதை, "தேஜோமய: புருஷ: ப்ராண யோஹ்யாத்யோ நாத்யவா யத: | நித்யோ ஸர்வ வ்யதிரேகாதா ஸிந: ஸ்தவஸாவீ" என்று நிர்ணயித்து, "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்று அந்தப் பரமாத்மாவைத்தான் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேணுமென்று ஸூத்ரகாரர் சொன்னார்' என்று பாஷ்யம் செய்தருளி, பிறகு உபநிஷத்துக்களிலும் அந்த ப்ருஹ்மமானது ஸத் என்றும் ஆகாசமென்றும் ஆத்மா வென்றும் காமனென்றும் ஹிரண்ய கர்ப்பனென்றும் பெயரால் சொல்லி யிருப்பதால் ஸந்தேஹமுண்டாகி, ஸ்ரீமானான நாராயணன்தான் ப்ருஹ்ம சப்தத்துக்குப் பொருளென்று பல உபநிஷத்துக்களாலும் ராமாயணாதிகளாலும் கீதையாலும் கண்டுபிடித்துச் சிஷ்யர்களுக்கு அதை ஸுலபமாய்த் தெரிவித்திருக்கிறார்.

அந்த அர்த்தத்தைப் பூர்வாசார்ய ச்லோகங்களால் ஸங்க்ரஹமாய் உபந்யஸிக்கிறேன். அதில், "கஸ்த்வம் தத்வவிதஸ்மி" என்று ஆரம்பித்து விசிஷ்டாத்வைத முடிவைக் காட்டின பிறகு, அத்வைதி "கதந்நு கதம்" என்கிற பல யுக்திகளால் சொன்னதையும், "நீயதாம்" என்கிற பலவித யுக்திகளால் அந்த அத்வைதியின் யுக்தியை நிராகரித்து ஸ்வமத ஸ்தாபநம் பண்ணினதையும், ஸங்க்ரஹமாய் உபந்யஸிக்க ஆரம்பிக்கிறேன்.

"கஸ்த்வம் தத்வவிதஸ்மி வஸ்து பரமம் கிம் ஸத்ய விஷ்ணு: கதம்
தத்வேதம் பரதேஹிதீயகஸ்ஸுவ த்ருயதஞ் ஸாக்ஷ்யமாநாக |
அந்யோ ஸ்வஸித்தி மிர: கதம் முக்தவமாத் ஆநந்த: கதம்
தத்ரஷ்டோ கதம் ஸ்வதவதரதத்தந்தக் கதம் நீயதாம் ||"

அத்வைதி:—நீர் யார்?

விசிஷ்டாத்வைதி:—[இக்கேள்வியில் நீர் என்பது ஒன்று, யார் என்பது ஒன்று, கேட்டவர் ஒருவர்; ஆக மூன்றுக்கு இது இடம் கொடுக்கிறபடியால் இது விசிஷ்டாத்வைதமென்று தோன்றுகிறது. ஏனென்றால் அத்வைத மதத்தில் ஒன்றைத் தவிர வேறு இல்லாததால் விசிஷ்டாத்வைதமாகவே ஜகத் இருக்கவேண்டு மென்று நினைத்துப் பதில் சொல்லுகிறார்.] உண்மையை அறிந்தவனாக ஆகிறேன்.

அத்:—உண்மை யென்பது ஸத்யம்; அதை 'அறிந்தேன்' என்பதில் அறிவு என்பது ஒன்று; நான் என்பது ஒன்று; இந்த மூன்றும் அடங்கி யிருப்பதால் இவ்விதப் பதார்த்தங்களில் உத்தமமான பதார்த்தம் எது?

விசி:—ஸத்யமான லோகத்தை ஜ்ஞாந சக்தி முதலானவைகளால் வ்யாபித்துக்கொண்டிருக்கிற விஷ்ணு என்பவர் தாம்.

அத்:—எக்காரணத்தால் அவ்விதம் சொல்லப்பட்டது ?

விசி:—வேதாந்தத்தில் " ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ " என்று லக்ஷ்மிக்குப் பர்த்தாவாக இருக்கிறவர் பரம காரணமென்று சொல்லப்பட்டிருப்பதால், வேதத்தில் 'ஸ்த்ரீகளுக்குப் பர்த்தா ஒருவர் தான்; இரண்டு பர்த்தா கூடாது ; புருஷன் இரண்டு ஸ்திரீகளைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று [" தஸ்மாதேகஸ்ய பஹ்வ்யோ ஜாயா பவந்தி ! தஸ்மாந்நைகஸ்யை த்வௌ பதீ விந்ததே ! "] யஜுர் வேதத்தில் சொல்லியிருக்கிறபடி வ்யாவ்ருத்தியைக் காண்பிப்பதற்காக லக்ஷ்மீபதி யென்று சொல்லி யிருப்பதாலும்' " தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:", "நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி! தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத் ", " தத்விஷ்ணோ: " இதிஶ்ருதே:, " யஸ்ய ப்ருத்வீ ஶரீரம்; ஜகத் ஸர்வம் ஶரீரம் தே" இவை முதலான பல ச்ருதி ஸ்ம்ருதிகளைக் கொண்டு உண்மையான உலகத்தைச் சரீரமாக உடைய விஷ்ணுதான் ஸத்யமான பொருள் என்று சொல்லப்பட்டது.

அத்:—" கத்ருத்ராய ப்ரசேதஸே மீடுஷ்டமாய தவ்யஸே " முதலான ச்ருதிகளாலும் " ஸஹஸ்ராணி ஸஹஸ்ரஶோ யே ருத்ரா அதி பூம்யாம் ! தேஷாம் ஸஹஸ்ரயோஜநே அவதந்வாநி தந்மஸி ! " என்பதனாலும், உலகத்தில் உயர்ந்த பொருளை இருப்புப் பெட்டியின் நடு அறையில் வைப்பது போல் " ஶிவ: " என்கிற பதத்தை யஜுர் வேதத்தின் ருத்ர ப்ரச்நம் நடுவில் "நம: ஶிவாய ச" என்று சொல்லியிருப்பதால் ஈச்வரனுக்கு மேன்மை ஏற்படுகிறதே ஒழிய, விஷ்ணுவுக்கு நீர் சொல்வது எப்படி அந்வயிக்கும் ? தவிரவும், உங்கள் ஸம்ப்ரதாயப்படிக்கு மிகவும் உத்க்ருஷ்டமான " வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் " என்று சொல்லப் பட்ட நம்மாழ்வார் செய்தருளின திருவாய்மொழியின் ஆதி மத்ய அந்தங்களில் " அயர்வறு மமரர்கள் ளதிபதி யெவனவன் " என்றும், " நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியா ரென்றோடும் " என்றும், " அரியை யயனை யரனை யலற்றி " யென்றும் பாடி யிருப்பதாலும், யஜுர்வேத ச்ருதியிலும் " நம: ஸபாப்யோ ஸபாபதிப்யஶ்ச தே ", "நமஸ்தே ருத்ர மந்யவே ", " அம்பே அம்பாலிகே " என்று ஆதி மத்ய அந்தங்களில் ருத்ரனுக்கே ஏற்றம் சொல்லி யிருப்பதாலும், உம்முடைய விடை எப்படி ஒத்துக்கொள்ளக் கூடியதாகும் ?

விசி :—ருத்ர சப்தத்திற்கும் சிவ சப்தத்திற்கும் நீர் கீழ்ச் சொன்ன வண்ணமாக வேத வாக்யங்களுக்கு அர்த்தம் காணவில்லை யாதலாலும், " ருத்ரோ வா ஏஷ யதக்நி: " என்று வேதமே ருத்ர மென்பதற்கு அக்நி யென்பது பொருளென்று கூறிவிட்ட படியாலும், நீர் சொன்ன வேதமானது கர்ம காண்ட மென்றே ப்ரஸித்தி பெற்றதாலும், நீர் சொன்ன ருத்ர ப்ரச்நத்தைக் கொண்டு சில யாகத்தில் ஹோம மந்த்ரமாகச் சொல்லி யிருப்பதாலும், " ஶதருத்ரீயம் ஜுஹோதி ஹோமயேயே நைவைநம் ஶமயதி, ஶாந்த்யை ஶதருத்ரீயம் யஜதே: " என்றும் சொல்லி யிருப்பதால் ருத்ர சப்தத்திற்கு அக்நி என்பதுதான் பொருள். தவிர, சிவ சப்தத்திற்கும் " நமஸ்தே ருத்ர " என்று ஆரம்பித்துப் பல நமஸ்காரங்கள் செய்த பிறகே அக்நி தேவனுக்குக் கோபம் தணிந்து, அதன்பின் ஏற்பட்ட க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடிய தன்மையைக் கண்டு காண்பிக்கவந்த க்ஷேம வாசியானது தான் சிவ சப்தத்தின் பொருள்.

நம்மாழ்வார் பாடல்களிலும், " நங்கபிரானு மன்றுய்யக்கொண்டது நாராயண னருளே " என்று திருவாய்மொழியில் நாலாவது சதகத்தின் பத்தாவது தசகத்தில் ஈச்வரனுக்குப் பரதத்வ சப்த வாச்யத்வமில்லை யென்பதையும், விஷ்ணுவுக்கே பரதத்வ சப்த வாச்யத்வ முண்டு என்பதையும் நன்றாய் விளக்கி யிருப்பதால், முடிவடைகிற பாட்டில் " அரியை யயனை யரனை யலற்றி " என்பதற்கு அபிப்ராயமானது உலகத்தில் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைப் பிரித்துத் தனித்தனியாக அதிகாரங்களைச் செய்வது போல் துலக்கி யிருப்பதைக் கொண்டு ஸமமாக எடுத்தவர்களைக் காண்பித்து, அவர்களுக்கும் அந்தர்யாமியாக இருப்பவர் என்று காண்பிப்பதற்காகப் பாடப்பட்டதே தவிர வேறில்லை ; மேலும் அம் மூன்று பேர்களில் ப்ருஹ்மாவையும் ருத்ரனையும்,

" குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர் பெய்து
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி—கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேலேறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியை யாங்கு"

என்பதால் தாழ்ந்தவர்கள் என்றும் நிரூபித்திருக்கிறார்.

மற்றும் ச்ருதியிலும் காரணம் சொல்லவந்த இடத்தில், " யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்மேதி " என்பதால் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இவைமூன்றுக்கும் காரணம் எவனோ அவனே ப்ருஹ்ம மென்று சொல்லி

யிருப்பதைக்கொண்டு, அந்த உபநிஷத்தின் சேஷமான புருஷஸூக்த உத்தர நாராயணநுவாகாதிகளிலும் ஸர்வ ஜகத்திற்கும் ஸர்வ வித காரணமும் விஷ்ணுவென்றே சொல்லி யிருப்பதை எல்லோருக்கும் தெளிவாகத் தெரிவிக்கிற ஆழ்வாருடைய பாடலானது, விஷ்ணுவினிடத்தில் தான் தாத்பர்யமென்று தெளிவுற உரைத்திருக்கிறது. இன்னும், யஜுர் வேதத்தில் "அக்நிரவமோ தேவதாநாம் விஷ்ணு: பரம:" என்றும், "விஷ்ணுர்வை தேவா:" என்றும், விஷ்ணுவே தேவதைகளுள் உத்க்ருஷ்டமென்று சொல்லப்படுகிறது.

அத்:—"காரணம் து த்யேய: ஸம்பூர்ணாகாஸமத்யே த்யேய: ஸர்வைவ வதர்மி ஸர்வைக: ப்ரபோதகம்" இத்யாதிகளினால் அதர்வசிகோபநிஷத்துக்களில் ஈச்வரன் ஒருவன் தான் ஜகத்காரணமென்று சொல்லுகிற ஈச்வர வாக்யமே, தனக்கே பரதத்வத்தை வெளியிட்டிருப்பதை யெப்படி உம்மால் மறுக்கமுடியும்?

விசி:—"யோகாத் ரூடி: பலீயஸீ" என்று சப்தங்களுக்கு பிரித்து அர்த்தம் சொல்வதைக் காட்டிலும் பிரிக்காமலே ப்ரஸித்தமான அர்த்தத்தைச் சொல்வது உசிதமானாலும், "ப்ரோக்ஷணீஷ்வர்த்த ஸம்யோகாத்" என்கிற மீமாம்ஸா ஸூத்ரார்த்தம் சொல்லுகிற இடத்தில், ஸமுதாயார்த்தமான ரூடியான அர்த்தம் சொல்வதற்கு வேறு விரோதமான வாக்யார்த்தங்கள் இல்லாத விடத்தில் தான் என்று நிர்ணயிக்கப்பட்டு இருப்பதாலும், ப்ரக்ருதத்தில் விஷ்ணுதான் ஜகத்காரணம் பரதத்வம் என்று கீழ்ச் சொன்ன பல ச்ருதி, ஸ்ம்ருதி ஸம்ப்ரதாயங்களால் ஏற்பட்டுவிட்டபடியாலும், அதற்கு விரோதமாக 'ஸம்பு' சப்தத்திற்கு ரூடிபார்த்தத்தை ஒப்புக்கொள்ளாமல் ஸம் ஸுகம் பவதி அஸ்மாதிதி வ்யுத்பத்தியினால் மோக்ஷ ரூபமான ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய விஷ்ணு தானென்றே அர்த்தம்.

அத்:—உத்பன்னோ நவிஹாரா...வண:"
"உதஸ்தி: கலெள வராஹஸ்ய நாரஸிம்ஹஸ்ய வாமந: ; ராமோ ராமஸ்ய ராமஸ்ய க்ருஷ்ண: கல்கீ ச தே தச" என்கிற ஆதாரங்களினாலும்,

"கன்னபுரமாலே கடவுளிலு நீ யதிகம்
உன்னிலுமோ யானதிக மென்றுகேள்—முன்னமே
உன்பிறப்போ பத்தா முயர்சிவனுக்கு கோர்பிறப்பு
என்பிறப் பெண்ணத் தொலையாதே."

என்கிற பாட்டினாலும், விஷ்ணுவுக்குப் பல பிறப்புக்கள் உண்டென்று ஏற்பட்டிருப்பதால் ராமாவதாரத்தில் ராமனை யமன் நேரில் வந்தழைத்துப் போயிருப்

பதாகவும், க்ருஷ்ணாவதாரத்தில் க்ருஷ்ணன் வேடனால் காலில் அடிபட்டுத் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளினதாகவும், புராணங்கள் மூலமாகத் தெரிகிறபடியாலும் ஸாமாந்யஜநத்தைப்போல் "ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச" என்று அவனைச் சொல்லியிருக்கிறபடியாலும் இந்த விஷ்ணுவுக்குப் பரதத்வம்எப்படி ஸித்திக்கும்?

விசி:—"அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்று விஷ்ணுவுக்குச் சொல்லியிருக்கிறபடியால் பிறப்பில்லாதவனுக்குப் பல பிறப்புக்கள் உண்டு என்பதற்கும், தன் இச்சையால் வேண்டும்போது பல ரூபங்களையெடுக்கிறானென்பதற்கும், "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் । தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥" என்பதால் அவதாரமென்றே அர்த்தம் சொல்லவேண்டுமே தவிர, ஸாமாந்ய ஜநத்தைப்போல் அவனும் பிறக்கிறான் என்று சொல்ல முடியாது.

மற்றும் ராமாயணாதிகளிலும், ராமன் அவதரித்த காலத்தில் "கௌஸல்யா சுசுபே தேந புத்ரேணாமித தேஜஸா" என்றும், பாகவதத்தில் க்ருஷ்ணாவதார காலத்தில் "தமத்புதம் பாலகமம்புஜேக்ஷணம் சதுர்புஜம் சங்க கதாத்யுதாயுதம் । ஸ்ரீவத்ஸலக்ஷ்மம் கலசோபி கௌஸ்துபம் பீதாம்பரம் ஸாந்த்ரபயோதஸௌபகம் ॥ மஹார்ஹவைடூர்ய கிரீடகுண்டலத்விஷா பரிஷ்வக்த ஸஹஸ்ரகுந்தலம் । உத்தாம காஞ்ச்யங்கத கங்கணாதிபிர் விரோசமாநம் வஸுதேவ ஐக்ஷத ॥" என்றும் சொல்லுகிறதினால் ஸாமாந்ய ஜநத்தைப்போல் அவனும் பிறந்திருந்தால் கௌஸல்யா தேவியும் தேவகியும், "மரணம் ப்ரஸவ வேதநாம்" என்று சொல்லப்பட்ட மிகவும் துயரமான ப்ரஸவ வேதனையை அநுபவிக்காமல் குழந்தைகளைப் பார்த்து ஆநந்தித்ததாகவே தெரியவருவதால் ஸ்ரீ ராமக்ருஷ்ணர்கள் அயோநிஜரென்றுதான் சொல்லப்படவேண்டும். இவர்கள் அநுபவித்து வந்த ஸுகதுக்கங்களெல்லாம் அபிநயமென்றே புராணங்களால் தெரியவருகின்றன; உலக நடவடிக்கைகளையே காண்பிப்பதற்காக அவர்கள் அவதாரமெடுத்தபடியால் யமன் வந்தது போலவும், வேடனால் அடிபட்டதுபோலவும் காண்பித்து அபிநயம் பண்ணினதாகக் கருதப்படுகிறதேயன்றி, இவர்கள் பிறப்பை அவதாரமென்றே சொல்லவும் பரதத்வமென்றே கொள்ளவும் வேண்டும்.

அத்:—"ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ; ஏகமேவாத்விதீயம்; ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் ; விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்ம ; விஜ்ஞாநம் ப்ரஹ்ம ; ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி; தத்வமஸி; நேஹ நாநாஸ்தி கிஞ்சந ; ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம; ததஸ்த்வமஸி; ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம; அஹம் ப்ரஹ்மாஸ்மி; அயமாத்மா ப்ரஹ்ம; ஆத்மைவேதம் ஸர்வம்; அநாதி மாயா

யா ஸாவொ யதாஜீவ: வ்ருபாயதெ" இத்யாதி ச்ருதி ஸ்ம்ருதிகளால் கேவல சித் ரூபமான ப்ருஹ்மம் ஒன்றுதான் நித்யம்; மற்றவை பொய்யென்றும், அவித்யை யென்கிற பதார்த்தத்தால் ஒளியான ப்ரும்ஹமானது மறைக்கப்பட்டு அதன்பிறகு உலகம் முழுமையும் கயிற்றில் பாம்பு தோன்றுகிறது போலும், ஸ்வச்சமான ஸ்படிகத்தின் ஸமீபத்தில் செம்பரத்தன் புஷ்ப மிருந்தால் அந்தப் புஷ்பத்தின் சிவப்பினால் வெளுப்பான ஸ்படிகமானது சிவப்பாய்க் காணப்படுவது போலும், உலகம் ப்ரும்ஹத்தினிடத்தி லில்லாம லிருந்தாலும் இருப்பது போல் ப்ராந்தியை உண்டுபண்ணுகிறது. அந்த ப்ரும்ஹமும் அறிவுள்ளதல்ல; ஒளி மாத்ரமுள்ளது. அதுவும் விபு; நித்யம்; ஒரு ப்ரமாணத்தாலும் கண்டுபிடிக்க முடியாதது.

அப்படிப்பட்ட ப்ரும்ஹம் தானே ப்ரமித்து ஜீவேச்வராதிகள் போல் தோன்றி, கொஞ்ச காலம் கலங்கி, காலவிசேஷத்தில், "ஸமயஸ்ஸாதே விஸ்வமாயா நிவ்ருத்தி:" "தத்வமஸி" இவை முதலான ச்ருதிகளை ஆசார்யரிட மிருந்து உபதேசம் பெற்று, வாக்யார்த்த ஜ்ஞாநத்தால் அவித்யையை விலக்கிக்கொண்டு முக்தனாகும். முக்தனான ஆத்மாதான் பரமாத்மா பரப்ரும்ஹம்! என்று சொல்லப்படுகிறதே தவிர, வேறு உங்களால் சொல்லப்பட்டபடி காணப்படவில்லை. ஆகையால் உத்க்ருஷ்ட வஸ்து விஷ்ணுவென்று சொன்னது ப்ரும்ஹத்திற்கு ப்ரமம் வந்த காலத்தில் சொல்லப்பட்டதே தவிர வேறு இல்லை. ஆகையால் ஜ்ஞாந ஸ்வரூபமான ப்ரும்ஹம் ஒன்றுதான் உயர்ந்த வஸ்து வென்று சொல்லவும்,ம் மற்றவை பொய் யென்று சொல்லவும் வேண்டும். எது கண்ணுக்கும் அறிவுக்கும் புலப்படுவதோ அது பொய் யென்றே அநுமாநத்தால் கண்டு பி, க்கப்பட்டது.

விசி:—கண்ணுக்கும் அறிவுக்கும் புலப்பட்டதெல்லாம் பொய். ["யத்ருஸ்யம் தந்ம்ருஷா"] என்று சொல்ல முடியாது; 'யத்ருஸ்யம் தவிநாஸ்யம் விகாரஸ்யம் வா" என்று சொல்லத்தான் வேண்டும். அதாவது: வேறு எவ்விதத்திலும் மாறுதலடைந்த ஒரு பதார்த்தமாக இருக்கிறதே தவிர ஸஸஸ்ருங்கம் போல் அதைப் பொய்யென்று சொல்ல முடியாது. ஆகையால் சாஸ்த்ரத்தினால் ப்ரும்ஹத்தைக் கண்டுபிடிக்க முடியும். "ஸர்வஜ்ஞ உதீக்ஷா உதஸாஷி க்ருஷ்ண:", "உதஸா தா விஸாஜேத" இவை முதலான ச்ருதிகளால் கண்டுபிடிக்கமுடியுமென்றே சொல்லப்பட் டிருக்கிறது. தவிர ப்ரும்ஹமே அவித்யையால் ப்ரமிப்ப தென்பது மிகவும் தாழ்ந்த தன்மை. ஒளியான ப்ரும்ஹத்தினிடத்தில், பொய்யாயும் இருட்டுப்போலு மிருக்கிற அவித்யையானது எங்ஙனம் நெருங்கக்கூடும்? அப்படிக் கொள்ளில் 'உதிதெ ஸூர்யெ தமோ நஷ்டம்' என்றதைப்போல் சொல்லுகிற அர்த்தங்களும் ப்ரத்யக்ஷமும் விருத்தமுமாகும். ப்ரும்ஹத்திற்கு அறிவென்கிற தன்மையில்லையாகில் "வராஸஜ்

ஸ்ரீ:

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த

வ்யாக்யாநத்துடன்

வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யரால்

பரிசோதிக்கப்பட்டு

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாரால்

சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி 5028 ப்ரபவ ஞு

1927.

ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே", "ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" இவை முதலான ச்ருதிக ளெல்லாம் வ்யர்த்தமாகும். ஆனால் உங்களால் சொல்லப் பட்ட ச்ருதிகளுக்கு 'உலக மெல்லாம் உண்மை; இவ்வளவிலும் பரமாத்மா அந்தர்யாமியாக இருக்கிறார்; இவரை விட்டுப் பிரிந்த பதார்த்தம் கிடையாது' என்றே தாத்பர்யம் கொள்ளவேணும். ஏனென்றால் "யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" முதலான ச்ருதிகளால் சிதசித் சரீரக பரமாத்மா ஒருவரென்று அத்விதீய பதத்திற்கு அர்த்தம்.

ஆகையால் "ஸத்யம் தவ ப்ரஸ்ஸாரணே ஸ்பாடிக அந்தாதி அ ரூபாதி ச ஜ்ஞாநத்ருஷ்டாந்தம் ஸத்யம் விஹஸந்தோபாஹ்ருதி: கதம்" என்கிற உங்களுக்கு உண்மையான த்ருஷ்டாந்தம் காண்பிக்கக் கிடையாது. ஜபாகுஸும ஸ்படிகமணி த்ருஷ்டாந்தத்திலும் எல்லாம் உண்மை தான். ஆகையால், "ப்ரத்யக்ஷஸ்த்ய விலக்ஷண: ப்ரக்ருதித ஸ்த்ராதா வதிஸ்தாம் ஸ்வஸ்மிநாத்ம ஸமாவத்தம் ஸிததத்வம் தஸ்யைவ வ்ருத்தி: ஸதாம்" என்பதுதான் விசிஷ்டாத்வைதியின் முக்ய கருத்து.

(1) "பஶ்யந்த்யஸ்தமிதேக்ஷ்ணாஸ் த்ரிஷ்ஷுவதாவிஷம் யத்வசஸ்தத்த்விஷ்டா ஸ்ஷூம் ஸாயஸ் ஸ்தேத்ரத்திவி நிஜவஸ் வீக்ஷணே ஸ்ரத்தேதே யத் ।
ஜ்ஞாநம் ஜ்ஞேயாதிஹீநம் ஹவதி யதிவதம் ஸம்விதாம் நிர்விஶேஷம் ஸத்யம் தத்வஹ மியத்ரா தத்தாஸ்திவிஷம் கொநத்யா வக்தரீஶா: ॥"

(2) "நாயத்ராவஸ் ஸ்வ காஶே த்விஸிவ ஸவள ஜ்ஞாநபாயத்ரா ச ஶாயா ந ப்ருஹ்ம ஜ்ஞாநஸ்வம் ஸ்ப்ருஶதி ந ததோ பந்தமோக்ஷௌ ச தஸ்ய ।
ந ஜ்ஞாந ஜ்ஞேயஹீநம் தஸ்ய ஸ்திவதம் நிர்விஶேஷம் ந கிஞ்சித் ஸத்யம் ஸத்யாஜ்ஞாநவிலம் ஜகதபி ந யதி ஸ்வோக்தபாயாதய: ஸத்ய: ॥"

(3) "க்ஷ்ஸ்வம் தக்ஷவித்வஸ்ரி வஸ்த்ர வாஸம் கிம் தஹீஷ விஷ்ணு: கதம் தமேவம்வாஸ தைத்திரீயக ஶவ த்ருயஞ ஸம்பவஶதாஸ் । கநத்யாஸ்தஹீஷ மிஸ: கதம் மாணவஶா ப்ரத்ராஹ ஸாத்ரு: கதம் தத்ரஷ்த்ரா கதஸாஹ்வ த்யவதாஸ தத்தத்ஸ் கதம் நீயதாம் ॥"

இந்த ப்ரகாரமாக உபந்யாஸத்தைப் பாகவத வந்தநாதி புரஸ்ஸரமாக உபஸம்ஹாரம் செய்துகொள்ளுகிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பகவானுடைய ஜகத் காரணத்வம்.

(ஸ்ரீ உப. தேவனார் விளாகம் லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்.)

ப்ரஹ்மாஸ்யாதி ஸங்க்யாய ஜந்மாத்யேந யோ(அ)பவத் ।
தம் ப்ரபத்யே ஜகத்ஸேதும் லக்ஷ்மீந்ருஹரிமவ்யயம் ॥
யோ விஶ்வம் ப்ரஹ்மயா ஸ்ருஜதி ஸம்க்ஷிப்ய ஸ்வயம் ஸம்ரக்ஷதி
ஸம்ஹ்ருஷ்டா ஆஜ்ஞாநந்த ப்ரவிஶ்ய கார்யே ஸர்வாணி காரணாநி ।
யோ வ்யாப்தம் ப்ரக்ருதி அகார ஸஹஸா ஸம்ஹாரநாதாநிஶ
ஸம் லக்ஷ்மீந்ருஹரிம் பஜே நிஜஜநத்ராணைகதீக்ஷாதரம் ॥

லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஶங்கர யதீந்த்ரஸேவா ஸம்வாதிதாக்ஷ விஷயோ
பஹுதாஜ்ஞயோபாஸ்ய । விஜ்ஞாபயாமி விநயாத் ஜநஸ்ய யாவஸ: கதர்ஶக
உக்த்ர ஜநதாம் ப்ரக்ருதிஸ்வயாக்தம் ॥

" ப்ரஹ்மண: ஶக்திநிமித்தோபாதாநத்வம் " என்பதற்கு, " நிமித்த உபாதாநத்வம் நிமித்தோபாதாநே, ஶக்திஸ்ய நிமித்தோபாதாநே ஶக்திநிமித்தோ பாதாநே, தயோர்பாவ: தத்வம்" அபிந்ந கார்யத்தை அதாவது ஒரே கார்யத்தைக் குறித்து நிமித்தமாயும் உபாதாநமு மாகை; ப்ரும்ஹத்தி னிட முள்ள ஒரே கார்யத்தைக் குறித்து நிமித்தமாயும் உபாதாநமாயு மிருக்கும் தன்மை என்பது பொருள்.

ப்ரும்ஹ விசாரத்திற்காக ப்ரவ்ருத்தமான வேதாந்த சாஸ்த்ரத்தில் முதல் அத்யாயத்தில் ப்ரும்ஹத்திற்குக் காரணத்வத்தை ஸ்தாபித்தார். அதில் 'ஜந்மாத்யஸ்ய யத:' என்ற இரண்டாவது ஸூத்ரத்தால் ப்ரும்ஹத்திற்கு லக்ஷணம் சொன்னார். அதாவது, அஸ்ய—இந்த ஜகத்திற்கு, யத:—எத னிடமிருந்து, ஜந்மாதி—ஸ்ருஷ்டி முதலியவைகள் (ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரள யங்கள் என்றபடி) ப்ரவர்த்திக்கின்றனவோ என்ற க்ரியையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அது 'ப்ரஹ்ம' என்று சொல்லிற்றாயிற்று. லக்ஷணமா வது—தூஷணத்ரய ரஹித தர்மம். தூஷண த்ரயமாவது—அவ்யாப்தி அதிவ்யாப்தி அஸம்பவங்கள். அதில் அவ்யாப்த்யாதிகளுக்கு விரிவான வட மொழி பரிஷ்காரங்கள் இருந்தபோதிலும், அவைகளை விட்டுவிட்டுப் பதார்த் தங்களை மட்டும் பார்ப்போம். வ்யாப்தி யென்றால் பரவுதல்; அவ்யாப்தியாவது

பரவுதல் இல்லாமை. எதில் பரவுதல் இல்லாமை என்றால், லக்ஷ்யங்களில் பரவுதல் இல்லாமை. அதாவது சில லக்ஷ்யங்களில் இருந்து சில லக்ஷ்யங்க ளில் இல்லாமை. பசுவுக்கு நீல ரூப முடைத்தாயிருக்கை லக்ஷண மென் றால், வெள்ளைப் பசுவினிடத்தில் அந்த லக்ஷணம் இல்லாதபடியால் அந்த லக்ஷணத்திற்கு அவ்யாப்தி என்ற தோஷம் உண்டு. இப்படியே அதி வ்யாப்தி—அதிக்ரமித்து இருப்பு, அதாவது லக்ஷ்யங்களை அதிக்ரமித்து அலக்ஷ்யங்களிலும் இருக்கை. பசுவுக்குக் கொம்புடைமை (ஶ்ருங்கித்வம்) லக்ஷ ணம் என்றால், பசுவைக் காட்டிலும் வேறுபட்ட மஹிஷாதிகளிலும் அது இருக்கிறபடியால் இதற்கு அதிவ்யாப்தி என்ற தோஷம் உண்டு. அஸம்பவ:—அதாவது ஸம்பவ மின்மை; ஸம்பவமாவது இருப்பு, அது இல்லை இருப்பில்லை. லக்ஷ்யத்தில் லக்ஷணத்தின் இருப்பில்லை. பசுவுக்கு ஒற்றைக் குளம்பு உடைத்தாயிருக்கை லக்ஷணம் என்றால், அது பசுவினி டத்தி லில்லாதபடியால் அதற்கு அஸம்பவ: என்ற தோஷம் உண்டு. இவ் வாறு சொல்லப்பட்ட தோஷங்கள் மூன்றும் இல்லாதது லக்ஷணம். அதில் ஒரு லக்ஷணத்தில் விசேஷணங்களாக ஏதாவது விவக்ஷித்தால், அவை, முன் சொல்லப்பட்ட தோஷங்களில் எதையாவது வாரணம் பண்ணவேணும். இவ்விடத்தில் ஸ்ருஷ்டி ஸ்திதி லய காரணம் 'ப்ரஹ்ம' என்று மூன்றைக் குறித்துக் காரணத்வம் விவக்ஷிதமா? அல்லது ஒவ்வொன்றைக் குறித்துக் கார ணத்வம் விவக்ஷிதமா? என்று பார்த்தால் ஒவ்வொன்றைக் குறித்துக் காரணம் என்று சொன்னாலுமே முன் சொல்லப்பட்ட தூஷணங்கள் இல்லாத படியால் ஒவ்வொன்றே யமையும். ஆனால் ஸூத்ரத்தில் மூன்றைக் குறித் தும் காரணத்வம் லக்ஷணமாக ஏற்படுகிறதே யென்றால் 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே' என்ற விடத்திலுள்ள 'யத:' என்ற பதத்தையே ஸூத்ரகாரரும் எடுத்திருப்பதால் ச்ருதியில் எப்படி ஏற்படுகிறதோ அப் படியே ஸூத்ரகாரரும் அபிப்ராயப்பட்டார். ச்ருதியிலோ 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே । யேந ஜாதாநி ஜீவந்தி । யத்ப்ரயந்த்யபி ஸம்விஶந்தி । தத்ப்ரஹ்மேதி' என்று மூன்று 'யத்' பதங்களுக்கும் சேர்த்து ப்ரதி ஸம்பந்தியாக ஒரே தச்சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸமுதிதம் தான் (மூன்று காரணத்வமும் சேர்ந்ததுதான்) லக்ஷணம் என்று ச்ருதியின் அபிப்ராயம். ச்ருதியில் தான் வ்யர்த்த விசேஷண கடித லக்ஷ ணம் (ப்ரயோஜந மில்லாத விசேஷண பதத்தோடு சேர்ந்த லக்ஷணம்) பொருந் துமோ வென்னில்; ஜந்ம காரணம் 'ப்ரஹ்ம' என்றால் ஸ்திதி காரணம் வேறு இருந்தாலும் இருக்கலாம் என்ற சங்கைகள் வருமாதலால் நிரதிசய ப்ருஹத்வ வாச்யமே (அதைக் காட்டிலும் பெரும்பாடில்லாத மஹிமை வாய்ந்ததே) லக்ஷ்ய மாகையால் ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு வெவ்வேறு காரணமாயிருந் தால் ஸ்ருஷ்டி காரணத்திற்கு ஸ்திதி காரணத்வானுகுணமான (ஸ்திதி கார

ணமா யிருக்குகைக்கு வேண்டியதான) ஜ்ஞாந சக்தியில்லாதபடியால் நிரதிசய ப்ருஹத்வம் ஸித்திக்காமல் நம்முடைய லக்ஷ்யாகார விபரீதமான லக்ஷ்யத்தின் ஸித்தி யேற்படும். ஆகையால் அந்தச் சங்கையைப் பரிஹரிப்பதற்காக அப்படி ச்ருதி சொல்லிற்று.

இவ்விடத்தில் சொன்ன ஸ்ருஷ்ட்யாதி காரணத்வம் எவ்வகைப் பட்டதென்று விசாரிப்போம். 'யத:' என்ற தஸில் பஞ்சம்யர்த்தத்தில் வந்திருக்கிறது. அந்தப் பஞ்சமீ தானும், 'जनिकर्तुः प्रकृतिः' (जायमानस्य हेतुरपादानं स्यात्) (உண்டாகிறதற்குக் காரணம் அபாதாநம் என்ற பேருள்ளதாகும்) என்ற வ்யாகரண ஸூத்ரத்தால் அபாதாந ஸம்ஜ்ஞை வந்து 'अपादाने पञ्चमी' என்ற ஸூத்ரத்தால் வந்திருக்கிறது. ஸூத்ரார்த்தத்தை விசாரித்தால் மஹாபாஷ்யாதிகளில் 'जनिकर्तुः' என்ற ஸூத்ரத்தை ப்ரத்யாக்யாநம் பண்ணும் ப்ரகரணத்தை நோக்கினால், ப்ரக்ருதி பதத்தை உபாதாந பரமாகவே பாஷ்யகாரர் அபிப்ராயப்பட்டிருப்பதாக ஏற்படுவதால், இவ்விடத்தில் 'प्रकृतिः' என்பதற்கு விவரணமான 'हेतु' என்ற பதமும் உபாதாநத்தைத் தான் சொல்லுமாதலால் 'उपादानं हरिर्वास्तु निमित्तं च हरो भवेत्' (உபாதாந காரணம் ஸ்ரீமந் நாராயணன், நிமித்த காரணம் ருத்ரன்) என்று வ்யோமாதீத மதத்தில் சொல்லப்பட்டபடி உபாதாநத்வ மாத்ரம்தான் ப்ருஹ்மத்திற்கு (அதாவது ப்ரும்ஹ சப்த வாச்ய நாராயணனுக்கு) ஏற்பட்டதென்னில், இவ்விடத்தில் 'யத:' என்ற ஸூத்ர பதத்தில் பஞ்சமீ ஹேதுத்வ பரம் தான் 'विभाषा गुणेऽस्त्रियाम्' (गुणे हेतावस्त्रीलिङ्गे पञ्चमी वा स्यात्) என்ற வ்யாகரண ஸூத்ரத்தில் 'விபாஷா' என்ற யோகவிபாகத்தால் அந்தப் பஞ்சமீ வந்திருக்கிறது. அது हेतौ पञ्चमी. 'जनिकर्तुः' என்ற ஸூத்ரத்தால் வந்து உபாதாநத்வ பரமாகில் ஸ்திதி லயங்களில் உபாதாநத்வம் அந்வயிக்காது. ஆகையால் மூன்றுக்கும் ஸாதாரணமான ஹேதுத்வம் தான் விவக்ஷிதம். உபாதாநத்வமும் ஹேதுத்வ ரூப ஸாமாந்ய விவக்ஷையா ஸித்திக்கலாம். ச்ருதியிலோ வென்றால் 'यतो वा इमानि भूतानि जायन्ते' என்ற பஞ்சமியோடு மேல் வாக்யத்தில் சொல்லப்பட்ட ஸ்தித்யாதிகளுக்கு அந்வய மில்லாதபடியால் பஞ்சமிக்கு உபாதாநத்வம் அர்த்தமாகச் சொன்னால் பாதக மில்லை. தவிர, யோக விபாகமானது ஏதாவது ஜ்ஞாபக மிருந்தால்தான் ஆச்ரயிக்கலா மாகையால் யோகவிபாகாத் பஞ்சமீ சொல்வதைக் காட்டிலும் (स्वार्थे पञ्चम्याः) பாதக மொன்று மில்லாம லிருந்தால் ப்ரத்யக்ஷ ஸித்தி ப்ரபல மானபடியால் 'जनिकर्तुः' என்ற ஸூத்ரத்திற்குத் தான் ப்ரவ்ருத்தி சொல்லவேணும். ஆகையால் ச்ருதியில் உபாதாநத்வம் விவக்ஷிதம்.

ச்ருதியில் உபாதாநத்வம் விவக்ஷிதமாகி ஸூத்ரத்தில் அதை விவக்ஷிக்காமல் போனால், ஸூத்ரத்திற்கு ச்ருத்யநுஸாரித்வம் எப்படி ஸித்திக்கு மென்றால், ச்ருதியில் 'யத:' என்றவிடத்தில் பஞ்சமீ 'जनिकर्तुः' என்ற ஸூத்ரத்தினாலேயே வந்தாலும், யச்சப்தமானது அநுவாத மாகையால் அநுவாத மெல்லாம் ப்ராபக வாக்ய ஸாபேக்ஷமா யிருப்பதால் ப்ராபக வாக்யமான 'सदेव सोम्येदमग्र आसीत् एकमेवाद्वितीयम्' 'तदैक्षत बहु स्यां प्रजायेय' இத்யாதிகளில் 'सदेव इदम् अग्र आसीत् एकमेव' என்றும், 'बहु स्याम्' என்றுதானே பஹுவாக ஆகவேணு மென்று ஸங்கல்பித்தது என்றும் சொல்லியிருப்பதால் ப்ரும்ஹத்திற்கு உபாதாநத்வமும், 'अद्वितीयम्' (வேறு அதிஷ்டாதா இல்லை) என்று அதிஷ்டாத்ரந்தரத்தை நிஷேதிக்கையாலும் ஸங்கல்பாச்ரயமாகச் சொல்லுகையாலும் அதிஷ்டாத்ர பாவமும் அதாவது நிமித்தத்வமும் ஏற்படுகிறபடியால், தத்விருத்தமாக அநுவாதத்தில் விவக்ஷிக்கக்கூடா தாகையால் ச்ருதியில் பஞ்சமீ உபாதாநத்வ பரமாயிருந்தபோதிலும் நிமித்தத்வமும் யச்சப்த ஸ்வாரஸ்யத்தால் தெரியவருகிறது. பஞ்சமியின் அர்த்தமானது ஸ்தித்யாதிகளிலும் அந்வயிக்கும்படி ஆதிபத கடிதமாக நிர்த்தேசம் பண்ணால் ஸாமாந்ய ரூபேண ஹேதுத்வம் விவக்ஷிதமாகி உபாதாநத்வமும் நிமித்தத்வமும் சப்ததஏவ ஸித்திக்கும் என்ற அபிப்ராயத்துடன் ஆதிபத கடிதமாக ச்ருத்யுபாத்தமான 'யத:' என்ற பதத்தையே ஸூத்ரகாரரும் நிர்த்தேசித்தார்.

இப்படிச் சொல்லப்பட்ட உபாதாநத்வமும் நிமித்தத்வமும் ப்ரும்ஹத்திற்குப் பொருந்துமா என்கிற விசாரத்தை ஸூத்ரகாரர் இந்த அத்யாயத்தின் நான்காவது பாதத்தில் கடைசி அதிகரணத்திற்கு முன் அதிகரணமான ப்ரக்ருத்யதிகரணத்தில் வைத்துக்கொண்டு காரணத்வத்தை நிகமித்து ப்ரதமாத்யாயத்தைத் தலைக்கட்டினார். तथाहि—ब्रह्मणः உபாதாநத்வமும் நிமித்தத்வமும் கூடாதென்று சொல்லுமவர்கள் வைசேஷிக யோக பாசுபதாதிகள். அதில் வைசேஷிகன் சொல்வதாவது—காரணம் மூவகை; ஸமவாயி, அஸமவாயி, நிமித்தம் என்று. ஸமவாய ஸம்பந்தேந உண்டாகிற கார்யத்தைக் குறித்து, தான் தாதாத்ம்யேந காரணமாகிறது ஸமவாயி காரணம். स्व समवाय सम्बन्धेन கார்யத்தைக் குறித்து समवायि सम्बन्धेन காரணம் அஸமவாயி காரணம். இந்த இரண்டு காரணத்தைக் காட்டிலும் வேறுபட்டது நிமித்த காரணம் என்று அவைகளுக்கு லக்ஷணம். இவ்விடத்தில் இந்த லக்ஷணங்களுக்குப் பரிஷ்காரங்களும் ப்ரயோஜநங்களும் விரிவாக இருந்தபோதிலும், அவை நமக்கு ப்ரக்ருதோபயுக்த மல்லாமையால் யதா ச்ருதார்த்தத்தை மட்டில் வைத்துக்கொள்வோம். तथा च, காலாத்ருஷ்டேச்வராதிகள் ஸாமாந்ய காரண மென்று நிமித்த காரணமாக ஈச்வரனை ஒப்புக்கொண்டால் உபாதாந காரணம் அதன்று என்று ஸ்பஷ்டமாக ஏற்படு

கிறது. இல்லாவிட்டால் நிமித்த காரண லக்ஷணமே வாராது. ஆகையால் நிமித்த காரண மாத்ரம்தான் ஈச்வரஃ; உபாதாந காரணம் தத்தத் அவயவங்கள் முதற்கொண்டு பரமாணு வரையில் ஆகலாம் என்று. இதுதான் அவர்கள் மதத்தில் சொல்லப்படும் யுக்தி. இது சரியல்ல. ஏனென்றால் நிமித்த காரண லக்ஷணம் அவர்கள் சொல்லுகிறபடி அவர்கள் மதத்திற்கே ஒட்டிவாராது. தண்டத்தைக் கடத்திற்கு நிமித்த காரணம் என்றும் தன்னிட முண்டாகும் ரூபாதிகளுக்கு ஸமவாயி காரணம் என்றும் ஒப்புக்கொள்ளுகிறார்க ளாதலால் அதற்கே நிமித்த காரண லக்ஷணம் பொருந்ாது. அதற்காக ஸமவாய்ய ஸமவாயிகாரண பிந்நத்வம் என்றதை ''ஸமவாயி காரணதாஹீநா ஸமவாயி காரணதாஹீநா ச யா காரணதா தத்ராஸ்ரயத்வம்'' என்று பரிஷ்கரித்து, காரணம் ஒன்றாயிருந்த போதிலும் அதிலிருக்கிற காரணத்வம் என்ற தர்மமானது வெவ்வேறு என்று சொல்லி, கடத்தைக் குறித்துத் தண்டத்தில் இருக்கிற காரணத்வம் வேறு, தன்னிடத்தில் உள்ள ரூபாதிகளைக் குறித்து இருக்கிற காரணத்வம் வேறாகையால் லக்ஷண ஹாநி யில்லை என்றால், அதே மாதிரியாகவே ஈச்வரனிடத்தில் இருக்கும் ஜகதுபாதாநத்வம் வேறு ஜகந்நிமித்தத்வம்வேறு என்று சொல்லலா மாகையால் ஈச்வரனிடத்திலும் லக்ஷண ஹாநி யில்லை. கிஞ்ச, வைசேஷிகாதிகளும் அவர்கள் மதப்படியே ஈச்வரனுக்கும் கடத்திற்கும் உள்ள ஸம்யோகத்தைக் குறித்து ஈச்வரனை ஸமவாயிகாரண மென்றும், கார்ய ஸாமாந்யத்திற்கு நிமித்த காரணமான படியால் அந்த ஸம்யோகமும் கார்யமான படியால் அதைக் குறித்தே நிமித்த காரணம் என்றும் ஒப்புக்கொள்ளவேணு மாதலால் அதேமாதிரி ஒரே ஜகத்தைக் குறித்து, நிமித்தமாயும் உபாதாநமாயும் ஈச்வரன் இருக்கத் தட்டில்லை. இந்தப் பூர்வ பக்ஷ பரிஹாரத்தை நம் மஹாதேசிகன் தத்வமுக்தா கலாபத்தில் நாயகஸரத்தில்,

"கர்த்தாவாதாநமேவ ஸ்வஸமவேதமாணே ஸ்வப்ரயத்ந ப்ரஸூதே
ஸம்யோகம் ஸ்வஸ்ய மூர்த்தை: ஸ்வயமுபஜநயந் ஸ்ரீஸ்வரோவைஸேஷிகை: ।
ஸர்வோபாதாநபாவ ஸ்த்த உத வடதே ஸர்வகர்த்ரய்யஸ்மிந்......"

என்று மூன்றுபாதத்தாலும், [ஸ்வப்ரயத்ந ப்ரஸூதே—தன்னுடைய ப்ரயத்நத்தால் உண்டுபண்ணப்பட்ட, ஸ்வஸமவேதமாணே—தன் ஸுகம் முதலிய குணங்களில், உபாதாநமேவ—ஸமவாயிகாரணமா யிருப்பவனை, கர்த்தா—கர்த்தாவாக அதாவது நிமித்த காரணமாக, இஷ்ட:. (அபவா கர்த்தாவ—நிமித்த காரணமா யிருப்பவனே, உபாதாநம்—ஸமவாயி காரணம் (இதி) இஷ்ட: என்று யோஜனையும் சிலர் சொல்வார்கள்.) ஸ்வஸ்ய—தனக்கு, மூர்த்தை: ஸஹ—மூர்த்த த்ரவ்யங்களோடு, ஸம்யோகம்—ஸம்யோகத்தை, ஸ்வயம்—தானாகவே, உபஜநயந்—உண்டுபண்ணுகிற, ஈஸ்வரோ

பீ—ஈச்வரனும், ஸவம்—உபாதாநமாக, இஷ்ட:—ஒப்புக் கொள்ளப் பட்டான். தத:—ஆகையால் (அதாவது நிமித்தத்திற்கும் உபாதாநத்திற்கும் ஐக்யமானது ஒப்புக்கொள்ளப் பட்டபடியால் என்றபடி;) ஸர்வோபாதாநபாவ:—ஸர்வத்திற்கும் உபாதாநமா யிருக்குந்தன்மை, ஸர்வகர்த்ரி—ஸர்வத்திற்கும் நிமித்த காரணமான, அஸ்மிந்—இந்த ஈச்வரனிடத்தில், வடதே—பொருந்துகிறது.] அதிகரண ஸாராவளியில்

"ஸ்வஜ்ஞாநாத்யம் ஸ்வஜநயம் பவதி ஸ்ருஜதி ச ஸ்வாந்யஸம்யோகமீஸ:
ஸம்யோகே மூர்த்தநிஷ்டே ப்ரக்ருதிரபி பவந் தஸ்ய நிமித்தம் க்ரியாத: "

என்று இரண்டு பாதத்தாலும் வெளியிட்டார். [ஸ்வஜ்ஞாநாத்யம்—தன்னிடமுள்ள ஜ்ஞாநம் முதலியவைகள், (தன்னிடமுள்ள என்றதால் தான் ஸமவாயி காரணம் என்றதாயிற்று) ஸ்வஜநயம்—தன்னாலே உண்டுபண்ணப் பட்டதாக, (அதாவது ப்ரயத்ந பூர்வகமாக உண்டுபண்ணப்பட்டதாக,) பவதி—ஆகிறது. ஈஸ:—ஈச்வரன், ஸ்வாந்யஸம்யோகம்—தன்னில் வேறு பட்டதோடு ஸம்யோகத்தை, ஸ்ருஜதி—ஸ்ருஷ்டிக்கிறான். மூர்த்தநிஷ்டே மூர்த்தத்ரவ்யத்தில் இருக்கிற, ஸம்யோகே—ஸம்யோகத்தில், ப்ரக்ருதிரபி—உபாதாநமா யிருந்தபோதிலும், ஸ:—அந்த ஈச்வரன்; விஜயப்ரயாநதோஸ ந பூர்வஸ கஸ்மிம் நிர்த்தேஸ:; க்ரியாத:—க்ரியையினால், (அதாவது ப்ரயத்நத்தால் ஸங்கல்பத்தால் என்றபடி) நிமித்தம்ஸ்யாத்—நிமித்தமாயும் ஆகலாம். அதவா, மூர்த்த நிஷ்ட ஸம்யோகத்தில், ப்ரக்ருதிரபி—உபாதாநமான, ஸ:—அந்த மூர்த்தத்ரவ்யம், க்ரியாத:—க்ரியையால், (நிமித்தம்ஸ்யாத் இதி யோஜ்ய:). அதன் பொருளாவது—எது எந்தக் கார்யத்திற்கு நிமித்த காரணமோ அது அதற்கு உபாதாநமாக மாட்டாது. ஆகையால் ஈச்வரனுக்கு உபாதாநத்வம் இல்லை என்ற யுக்தியைப் பூர்வபக்ஷி ஒப்புக்கொண்டபடியே போய்க் கண்டிக்கிறார். தன்னுடையப்ரயத்நத்தால் உண்டாகிற தன்னிடமுள்ள ஸுகம் ஜ்ஞாநம் முதலிய குணத்தைக் குறித்து ஸமவாயி காரணமான ஜீவனை ப்ரயத்ந த்வாரா காரணமானபடியால் நிமித்த காரணமும் ஆகிறான் என்று எப்படி ஒப்புக்கொள்ளப்பட்டதோ, ஸவம் மூர்த்த த்ரவ்யங்களோடு தனக்கு ஸம்யோகத்தை உண்டுபண்ணும் ஈச்வரனும் தாத்ருச ஸம்யோகத்தைக் குறித்து உபாதாநமாயும் நிமித்தமாயும் ஆகிறான் என்று எப்படி ஒப்புக்கொள்ளப்பட்டதோ, அதே மாதிரியாகவே எல்லா வஸ்துக்களுக்கும் உபாதாநமாயும் நிமித்தமாயும் ஈச்வரன் ஆகலாம் என்று.

ச்ருதி விரோதத்தை ப்ரதாநமாக வைத்துக்கொண்டு நிமித்தோபாதானைக்யத்தைக் கண்டிக்கும் ஸேச்வர ஸாங்க்யனை நிரஸித்தால், யுக்திக்கு மட்டில் ப்ராதாந்யம் சொல்லி அதைக் கண்டிக்கும் வைசேஷிகாதிகள் நிரஸிதராகிறார்கள் என்ற அபிப்ராயத்தால் ஸ்ரீமத் பாஷ்யத்தில் ப்ரக்ருத்யதிகரணத்தி

ற்கு ப்ரதாந பூர்வபக்ஷியாக ஸேச்வர ஸாங்க்யனை வைத்து அருளிச்செய்தார். அவர்கள் சொல்வதாவது:—உபாதேய உபாதாநங்களுக்கு அநந்யத்வ மாகையால் அசேதநத்திற்குச் சேதநனான ஈச்வரன் எப்படி உபாதாநமாகக் கூடும்? தவிர வேதாந்தங்களிலேயே 'நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் । ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மாஜரோऽமர:' என்று ஈச்வரனை அபரிணாமியாகவும் 'விகாரஜநநீமஜ்ஞாம், [illegible] ஸா ஜநித்ரீ பூதபாவிநீ' என்று ப்ரக்ருதியை விகரிக்கிறதாகவும் ஸ்ருஷ்டியைப் பண்ணுகிறதாகவும் சொல்லியிருப்பதால் பரிணமியாத வஸ்துவுக்கு உபாதாநத்வம் எப்படி கூடும்? உபாதாநத்வம் பரிணாமாச்ரய மன்றோ? ஆகையால் பரிணாமாச்ரயமான ப்ரக்ருதிக்கு உபாதாநத்வம், அபரிணாமியான ஈச்வரனுக்கு நிமித்தத்வம் என்றுதான் சொல்லவேணும். இப்படியே ஸ்பஷ்டமாக 'அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத்' 'மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேஶ்வரம்' என்று ச்ருதியிலும், 'மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்' என்று பகவத்கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் உபாதாநோபாதேயயோ: அநந்யத்வத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் அசேதநமான உபாதாநம் இதராநதிஷ்டிதமாகக் கார்யகாரி யன்றாதலால் ம்ருதாதிகளுக்குக் குலாலாதிகள் அதிஷ்டாதாவாயிருக்கிறதுபோல் ஈச்வரன் அதிஷ்டாதாவா யிருக்கவேணும். 'ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேய, ததாத்மாநம் ஸ்வயமகுருத' என்றதெல்லாம் 'ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்' என்றாப்போல் அவதார விஷயமாகச் சொல்லவேணும் என்று.

இதுவும் சரியல்ல. ததாஹி—ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தங்களைப் பார்க்க வேண்டும். உத்தாலகரானவர் தமது புத்ரனான ச்வேதகேதுவுக்கு நிமித்தோபாதாநத்வ விசிஷ்ட ப்ரும்ஹஜ்ஞாநத்தை உண்டுபண்ணவேணும் என்ற எண்ணமுள்ளவராய், அதை அவன் கேட்காமல் சொல்லக்கூடாது என்ற அபிஸந்தியுடன் (அப்படிப்பட்ட நியந்தாவைக் கேட்டுத் தெரிந்துகொண்டாயா? எதை அறிந்தால் தெரியாததெல்லாம் தெரியுமோ) 'ஸ்தப்தோऽஸ்யுத தமாதேஶமப்ராக்ஷ்ய: யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி' என்று ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞையை உபக்ஷேபம் பண்ணி, அவன் 'கதம் நு பகவஸ் ஸ ஆதேஶோ பவதி' என்றவுடன் 'யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந' என்றாரம்பித்து ம்ருத்பிண்ட லோஹமணி நக நிக்ருந்தந த்ருஷ்டாந்தங்களைச்சொல்லி 'இதேமாதிரிதான் அந்த ஆதேசம்' என்று சொல்லியிருக்கிறார். ப்ரும்ஹத்திற்கு உபாதாநத்வம் சொல்லாவிட்டால் ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞை பொருந்ாது. குலாலாதி நிமித்த விஜ்ஞாநத்தால் கட விஜ்ஞாநம் ஏற்படுமா? ஆனால் ஒரு க்ராமத்தில் ப்ரதாநனாய் ஒருவன் இருந்தால் அவன் பார்க்கப்பட்டால் எல்லாரும் பார்க்கப்பட்டார்கள் ('ப்ரதாநே

த்ருஷ்டே ஸர்வே க்ராமவாஸிநோ த்ருஷ்டா:') என்றாப்போல் ப்ராதாந்யபரமாக ப்ரதிஜ்ஞை கூடாதா வென்னில்; ப்ராதாந்யபரமாக இருக்கும் பக்ஷத்தில் இது லோக ந்யாயஸித்தமானபடியால் பன்னிரண்டு வருஷம் குருகுல வாஸம் பண்ணி அர்த்தங்களைத் தெரிந்துகொண்ட ச்வேதகேது, 'கதம் நு பகவஸ் ஸ ஆதேஶோ பவதி' என்று ப்ரச்நம் பண்ணமாட்டான். கிலு, அவன் ப்ரச்நம் பண்ணினும் '[illegible] ஜ்ஞாதம் பவதி' என்றே பதில் சொல்லவேணும். ம்ருத்பிண்டாதி உபாதாந த்ரவ்யங்களை த்ருஷ்டாந்தமாக எடுத்ததும் பொருந்தாது. 'பஹு ஸ்யாம் ப்ரஜாயேய' என்றதற்கு மேல் 'இதம் ஸர்வமஸ்ருஜத' என்றிருப்பதால் ராமக்ருஷ்ணாதிரூபேண பஹுபவநம் விவக்ஷித மன்று. ஏவம் 'ததாத்மாநம் ஸ்வயமகுருத' என்ற விடத்தில் தச்சப்தமானது 'ததோ வை ஸதஜாயத' என்ற பூர்வ வாக்யத்தில் [illegible] யாதலால் இதுவும் அவதாரபர மன்று. தவிர, 'கிம் ஸ்வித்வநம் க உ ஸ வ்ருக்ஷ ஆஸீத் மநீஷிணோ மநஸா ப்ருச்சதேது தத் யதத்யதிஷ்டத் புவநாநி தாரயந்' என்று ஜகதுபாதாந நிமித்தத்தைக் கேட்டதற்கு, 'ப்ரஹ்ம வநம் ப்ரஹ்ம ஸ வ்ருக்ஷ ஆஸீத் ப்ரஹ்மாத்யதிஷ்டத் புவநாநி தாரயந்' என்று ப்ரும்ஹத்தையே உபாதாந காரணமாகவும் நிமித்த காரணமாயும் ஸ்பஷ்டமாகச் சொல்லி யிருக்கிறது.

ஆனால் ப்ரக்ருதிக்கு உபாதாநத்வம் சொல்லும் ச்ருதி விரோதி யாதோ வென்னில் 'மிதோ பேதம் தத்த்வேஷ்வபிவததி பேதஶ்ருதிரஸௌ விஶிஷ்டைக்யாதைக்யஶ்ருதிரபி ச ஸாத்வீ ஹைமவதீ । [illegible] நிகில ஜகதேகோபநிஷதா நிரீஶோ [illegible] ப்ரணிதயோ:' [அஸௌ பேதஶ்ருதி:—இந்த பேதச்ருதியானது ('த்வாவஜாவீஶநீஶௌ' 'போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா' இத்யாதிகள்), தத்த்வேஷு—தத்வங்களில் மித:—ஒன்றுக்கொன்று பேதம்—பேதத்தை, அபிவததி—சொல்லுகிறது. ஹைமவதீ—பூஜ்யையான, (மற்றுள்ள குத்ருஷ்டிகளைப் போல் நம்மவர்களை வ்யாமோஹிக்கப் பண்ணமலிருந்ததை நினைத்து அதற்கு இந்த விசேஷணம் கொடுத்தார் போலும்.) ஐக்ய ஶ்ருதிரபி—ஐக்ய ச்ருதி தானும், ('ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம', 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம்' இத்யாதிகள்). விஶிஷ்டைக்யாத்—விசிஷ்டம் ஒன்றா யிருக்கையால்,

ஸாயுஜ்ய—மூக்யார்த்தத்தோடு கூடியது. மற்றுள்ளாரைப்போல் அதற்கு லக்ஷணை முதலியன சொல்லவேண்டா மென்று கருத்து. ஸமவதீ ஸமஜாதா என்று விதேய விசேஷணமாகவும் சிலர் யோஜிப்பார்கள். உபௌ அபி அர்த்தௌ—இந்த இரண்டு அர்த்தங்களையும், ரக்ஷாய—ரக்ஷிக்கைக்கு, நிரீச:—தனக்கு ஈசனில்லாதவனான, லக்ஷ்மீச:—ஸ்ரீய:பதி, ச்ருதிபி:—மற்ற ச்ருதிகளால் ('ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தர: யஸ்ய ப்ருதிவீ சரீரம்' இத்யாதிகளால்). நிகில ஜகத் அந்தர்யாமிதயா—ஸர்வ ஜகத்திற்கும் அந்தர்யாமியாய் இருந்து கொண்டு ப்ரணிஹித:—சொல்லப்பட்டான். (இரண்டு அர்த்தங்களுக்கும் அந்யோந்ய வ்யாஹதி யில்லாதபடி ச்ருதிகளை நிர்வஹித்திருக்கின்றன என்று திருவுள்ளம்). இப்படி ஒரு ச்ருதிக்கும் அமுக்யத்வம் வாராதபடி நிர்வஹிக்கும் நம் ஸித்தாந்தத்தில் ச்ருதி விரோதம் ஏது? சிதசித்துக்கள் ப்ரும்ஹ ஸ்வரூபாந்தர்கதமானபடியால் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட ப்ரும்ஹமே ப்ரக்ருதி சப்தத்தால் சொல்லப்படுகிறது. ஆகையால், ப்ரும்ஹத்திற்குப் பரிணாமாச்ரயத்வம் வரலாம். சிதசித்துக்கள் ப்ரும்ஹ ஸ்வரூபாந்தர்க்கதமன்று என்றபோதிலும், ப்ரும்ஹண: ஸ்வ சரீர பூத சிதசித் த்வாரா பரிணாமாச்ரயம் வரலாம். ஆகையாலேயே நிர்விகாரத்வாதி ச்ருதி விரோதமு மில்லை. எப்படி பாலத்வ யுவத்வாதி பரிணதியானது, ஆத்மாவில் ஸத்வாரகமாயிருந்தாலும், ஆத்மாஸாதாரண குணங்கள் ஆத்மாவிலும், சரீராஸாதாரண குணங்கள் சரீரத்திலுமிருக்கின்றனவோ, அதேமாதிரி ஈச்வர சரீரமான சிதசித்துக்களிலுள்ள தோஷங்கள் சரீரியினிடத்தில் சேராது. இதையே முன் எடுக்கப்பட்ட தத்வமுக்தாகலாப ச்லோகத்தின் நான்காவது பாதத்தில் 'ஸர்வ ச்ருத்யைக்ய காமை: ப்ரணயிபிருசிதம் த்வாரதஸ்தத்ர த்ருஷ்டம்' [ஸர்வ ச்ருத்யைக்ய காமை: ப்ரணயிபி:—எல்லா ச்ருதிகளுக்கும் ஐகரஸ்யம் பண்ணுவதில் ப்ரியமுள்ளவர்களால், தத்ர அபி—இந்த விஷயத்திலும், உசிதம்—யோக்யமான, த்வாரத:—த்வாரமானது, த்ருஷ்டம்—ஒப்பப்பட்டது. 'ப்ரணயிபி: த்ருஷ்டம் த்வாரம் உசிதம் பவதி' என்று அந்வயித்துப் பக்ஷபாதமில்லாமல் ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் பற்றினார் என்று தோற்ற, உரைப்பார் சிலர்] என்று ஸாதித்தார்.

(இன்னும் வரும்.)

பகவத்கீதையின் மகிமையும் அதன் பரம தாத்பர்யமும்

[ஸ்ரீ. உ.ப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.]

(முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி பக்கம் 6.)

ஔபநிஷத புருஷன் தானே உலகில் தர்மஸம்ரக்ஷணார்த்தமாக அவதரித்து உலகத்திலுள்ளோர்களை உய்விக்க எண்ணங்கொண்டு, தன் வாக்கினாலேயே சொல்லிக் காட்டியிருக்கிற கர்ம மார்க்கங்களையும் ஜ்ஞாந மார்க்கங்களையும் பக்தி மார்க்கங்களையும் அநாதரித்து, 'வர்ண விபாகங்கள் கிடையா; ஆச்ரம தர்மங்கள் கிடையா; வேதங்கள் அபௌருஷேயங்களல்ல; ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களெல்லாம் கட்டுக்கதைகள்; அவை ஜீவிகார்த்தமாகச் சில நயவஞ்சனை செய்யும் திறமையுள்ள புத்திசாலிகள் சேர்ந்து எழுதி வைத்துக் கொண்டவை' என்று சில ஆதுநிகர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள்.

இவர்கள் சொல்லும் வார்த்தைக்கு ப்ரமாணமே வேண்டுவதில்லையாம்; முன்னோர் சென்றவழி செல்லக் கூடாதாம். அப்படிச் செல்வது விவேகிகளுக்கு அழகல்லவாம். சென்றால் அவர்களுக்குச் செம்மறியாட்டுத் தன்மை உண்டாய்விடுமாம். ஈச்வரன் தனக்கு அளித்திருக்கிற புத்தியைக் கொண்டு பலவழிகளில் செலுத்தி, தானாகப் பல விஷயங்களை அறிவதும் அந்தப்படி செய்வதும் தான் புத்தி லக்ஷணமாம். தவிரவும், வர்ணங்களின் பாகுபாடுகள் யாரோ சில ஸ்வகார்யப் புலிகளான வஞ்சகர்களால் கல்பிக்கப்பட்டனவைகளாம். வர்ணங்களை ஒட்டித் தொழில்கள் என்பதே இல்லையாம். அந்தணர் வணிகர் வேளாளர் என மூன்றே வகுப்புத்தான் உண்டாம். இந்தப் பாகுபாடும் தொழிலால் ஏற்பட்டதாம். எவர்கள் ஜ்ஞாநியாக இருந்தாலும் தபஸ்வியாக இருந்தாலும், அவர்களே அந்தணர்களாம். எவர்களாக இருந்தாலும் ஸரி, வ்யாபாரம் செய்பவர்கள் வணிகர்களாம். இவ்வண்ணமே எவர்கள் பயிர்செய்கிற தொழிலுள்ளவர்களோ அவர்கள் வேளாளர்களாம். இவ்வாறாகச் சிலர் மனம்போன வண்ணம் போய்க்கொண்டு பிதற்றுகின்றனர். இந்தக் கக்ஷி சொல்லுகின்ற கொடியர்களுடைய ஸமூஹம் இக் கலிகாலமகிமையினால் வ்ருத்தி யடைந்து வருகின்றது. க்ரூரனான கலி புருஷனுடைய அரசியல் மகிமையினால் வேத சாஸ்த்ரங்களின் ப்ரசாரம் வர வர குன்றிவிட்டது. தர்மங்கள் ஓடி ஒளிந்து விட்டன. மஹா

ரிஷிகள் போன்ற மஹான்கள் இருக்கிற இடமே தெரியவில்லை. க்ராமங்களில் எங்குப் பார்த்தாலும் வேதாத்யயநங்களும் சாஸ்த்ர ப்ரவசநங்களும் தர்மாநுஷ்டாநங்களும் ஜ்வலித்துக்கொண்டிருந்த காலம் பறந்துபோய் விட்டது எங்குப் பார்த்தாலும் பகலிலோ இரவிலோ க்ராமவாஸிகள் கூட்டங் கூட்டமாகக் கூடிப் பயனற்றபேச்சுக்களைப் பேசியோ கலகங்கள்செய்து கொண்டோ உறங்கிக்கொண்டோ சீட்டாடிக்கொண்டோ காலத்தைக் கழிக்கின்றனர். க்ராமங்களே இவ்வண்ணமாக இருந்தால், நகரங்களின் ஸ்திதி கேட்க வேண்டுமோ? இவ்வாறு தர்மங்கள் தடுமாற்றமடைந்து போனதுதான் தற்காலத்திய கலி புருஷர்களின் நடநத்துக்குக் காரணம். இப்படிப்பட்ட கொடிய ஸ்வபாவமுடையவர்களுக்குச் சாஸ்த்ரீயமான வழியை எடுத்துக் காட்டுவது பயன்படாது. ஏனெனில் அதில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லாமையால். தங்களைவிட மேதாவிகளே உலகத்தில் இல்லை என்கிற நிச்சயமுள்ளவர்களாதலாலும் இவர்களுக்குப் புத்தி சொல்பவர்கள் உலகத்திலில்லை. ஆதலால் மனிதர்களில் புத்தி சொல்பவர்கள் இல்லாமல் போனபடியால் தெய்வம்தான் இந்த மகா புருஷர்களுக்குப் பதில் அளிக்கவேண்டும். அந்தத் தெய்வம் இவர்களுக்குப் புத்தி சொல்வதற்காக நேரில் உருவெடுத்து வந்தால் அதையும் இவர்கள் நம்பார்கள். ஹிதத்தைச் சொன்ன ஸாக்ஷாத் ஸ்ரீ கண்ணனைத் துர்யோதநாதிகள் நம்பினார்களா? மஹாபாபியாயும் அஸுர ஸ்வபாவம் வாய்ந்தவனாகவும் சிசு ஹத்தியைச் செய்வதில் துரந்தரனாகவுமிருந்த கம்ஸனுக்குப் பகவத் ஸங்கல்ப பலத்தினால் தேவகீ கர்ப்பத்தில் ஸ்ரீ பகவான் வாஸம் செய்யும்பொழுது, சிசு ஸ்வரூபியான அந்தப் பரமாத்மாவைக் கொல்வதில் எண்ணமே உண்டாகாமல் போனதுடன் "எனக்கு ம்ருத்யுவான சிசுவைக் கர்ப்பத்தில் தாங்கியிருக்கிற தேவகியைக் கொல்வது மஹா பாவத்தொழில்; இதனால் நம்முடைய கீர்த்தி அழிந்துவிடும்; அபகீர்த்தியைப் பெற்று உலகிலிருப்பதை விட மரணமே மனிதனுக்குச் சிறந்தது; மேலும் அப்படிப்பட்ட பாபி உயிர் துறந்தாலும் ஸாதுக்களும் அவனைச் சபிப்பார்கள்" என்று தர்மசிந்தனை உண்டானதுபோல், இந்தக் கலிபுருஷர்களும் தெய்வ வசத்தால் பகவத்கீதையை மாத்ரம் தலைகுலுக்கி ஏற்றுக்கொள்வதாகப் பேசுகிறார்கள். அபௌருஷேய வாக்குப் போல் இருக்கிற பௌருஷேய வாக்கானபடியால் அது அவ்வண்ணம் எல்லோருடைய மநஸ்ஸையும் கவருந் தன்மை வாய்ந்திருக்கிறதென்பது மஹான்களுடைய அபிப்ராயம். இந்த பகவத் கீதையை ம்லேச்சர்கள் க்றிஸ்தவர்கள் பௌத்தர்கள் ஜைநர்கள் நாஸ்திகர்கள் போன்ற புறச்சமயத்தார்களும் அகச்சமயத்திலும் விஷ்ணுபாரம்யத்தை ஸஹியாதவர்களும் பேதமின்றி மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறார்கள். முறைதப்பியோ முறையுடனோ பகவத் கீதாதாத்தை எல்லோரும் காட்டுகிறார்கள். ஆசாரம், ஜ்ஞாநம்,

சீலம், விவேகம், அநுஷ்டாநம், அபிஜநம், வித்யை, ஸத்ஸஹவாஸம், தர்மாசரணம் இவைகள் ஒன்றும் அறியாதவன்கூட, தான் அணிந்திருக்கிற சட்டைப் பையில் பகவத்கீதா பாகெட் எடிஷனைப் போட்டுக்கொண்டே ஸஞ்சரிக்கிறான். ஆகவே, இந்த பகவத் கீதா க்ரந்தமே இந்தக் கலிமஹா புருஷர்களுக்கு வாக்பந்த மந்த்ரம். இந்தக் கலிபுருஷர்கள் கொள்கைகளாவன:—

1. வர்ணாச்ரம விபாகம் கிடையாது.

2 வேதம் ப்ரமாணமன்று; அது நம்போன்ற மனிதர்கள் எழுதின வீண் சொற்கள்.

3. ஸ்ம்ருதி கர்த்தாக்கள் ஸாமாந்ய மனிதர்கள்.

4. வர்ணத்தார்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் கிடையா.

5. நீசர்களையோ ம்லேச்சர்களையோ அணுகலாகாது, அவர்களை ஸ்பர்சிக்கலாகாது என்பது அநீதியாகும்.

6. பால விதவா விவாஹம் ப்ரௌடா விவாஹம் இவைகள் உலகமுன்னேற்றத்துக்கு உரிய வழிகள்.

7. ஸமயத்துக்குத் தக்கபடி தன் புத்தியைக் கொண்டு நடப்பது தான் மநுஷ்யத் தன்மைக்குத் தக்கது.

இந்த ஏழு வினாக்களுக்கும் இம்மஹா புருஷர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கீதையே பதிலளிக்க ஸந்நத்தமாக இருக்கிறது

முதலாவது வினாவுக்கு விடை:—" [illegible] " என்கிற வசனம் போதுமான பதில்.

இரண்டாவது வினாவுக்கு:—'[illegible]', '[illegible]', '[illegible]', '[illegible]' இவை முதலிய வசநங்களால் வேத ப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டிருக்கிற பகவத் வசநமே தக்க உத்தரம்.

மூன்றாவது வினாவுக்கு:—'[illegible]' என்று யோகோபதேஷ்டாக்களுடைய கோஷ்டியில் ஸ்ம்ருதி கர்த்தாக்களுக்குள் ப்ராதாந்யத்தை வஹித்தவரும், ச்ருதியினால் 'யத்வை கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்' என்று புகழப்பட்டிருப்பவருமான மநுவைப்

பகவானே தன் திருவாக்கினால் புகழ்ந்திருப்பதனால் இந்த வினா ஆநந்தோத்தரமாகிறது.

நான்காவது வினாவுக்கு:—‘ஶமோ தமஸ்தப:’, ‘ஶௌர்யம் தேஜோ’, ‘க்ருஷிகோரக்ஷவாணிஜ்யம்’ ‘பரிசர்யாத்மகம் கர்ம ஶூத்ரஸ்யாபி’ என்கிற பகவத் வசநங்கள் தக்க விடைகள்.

ஐந்தாவது வினாவுக்கு:—‘நஶம் ப்ரஷ்டாதிகாரேஷு ப்ரவர்த்தநே தத்யோபாயஸம்பந்நா ஜ்ஞாநம் ஸாங்கம் ஸமாஶ்ரிதா:’, ‘ஸஹ காரம் ஸமர்ப்பயதாம் கர்ம க்ரியாயோகம் ஸமாஶ்ரிதா: | ஸாத்த்வஸாத்யேஷு ப்ரஷ்டாவ்யவஸாயகா: | தாநஹம்த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் | க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு | ஆஸுரீம்யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி | மாமப்ராப்யைவ கௌந்தேய ததோயாந்த்யதமாம் கதிம் |’ என்கிற ஸ்ரீ லோகநாதனான கண்ணனுடைய வசநங்களைக் கவனித்தால் அவை போதுமான உத்தரமாகும்.

ஆறாவது வினாவுக்கு:—‘தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ | ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி | ’என்கிற ஸ்ரீ கீதை 16-வது அத்யாயத்திலுள்ள 24-வது ச்லோகம் அவர்களுக்கு கோடாலிப் படைபோன்றது,.

ஏழாவது வினாவுக்கு:—யஶ்ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத: | ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம்’ என்பது தகுந்த உத்தரமாகும்

இவ்வாறாக ஸர்வ சாஸ்த்ர ஸாரமான பகவத்கீதை யாகிற ஸூர்யன் ப்ரகாசிக்கும்பொழுதே அஜ்ஞாநமாகிற இருள் உலகில் உலாவுமேயாகில், இந்த இருள் வீக்கத்தைப்பற்றி நாம் என்ன சொல்வோம்? ஆச்சர்யக் கடலில் அமிழ்ந்து திகைக்கிறோம். இந்தக் கீதாசார்யனான ஸ்ரீ கண்ணனே “யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத | அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் |” என்று தாம் ப்ரதிஜ்ஞை செய்தவண்ணம் தமது அவதாரத்துக்கு உரிய காலம் நேர்ந்திருப்பதால் கல்கி அவதாரத்திற்கு முந்தியே அபிநவமான ஒரு அவதாரம் செய்து இக்கலி கோலாஹலத்தை அடக்குவாராக. “வேதஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத்பரம்” என்கிற வசநத்தின்படி ஸர்வ தேவதா ஸார்வ பௌமனாகவும் சுத்த ஸத்வமயனாகவும் ஷாட்குண்ய பரிபூர்ணனாகவும் ஸர்வ ஜகந் நியந்

தாவாகவும் ஸர்வாந்தர்யாமியாகவும் ஸர்வ பல ப்ரதனாகவும் ஸர்வ கர்மாராத்யனாகவும் ஸர்வ தோஷங்களாலும் விடுபட்டவனாகவும் ஸர்வகல்யாண குணகணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவனாகவும் பரம தயாநிதியாகவும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனை அடைவதற்கு ஸாதநங்கள் பலவகைப் பட்டனவாய் இருந்தபோதிலும், அத்துறைகளில் ப்ராணிகள் இழிந்து நம்மை வழிபடுவது அஸாத்யமென்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றிப் பரமகருணையினால் அந்த ப்ராணிகளுக்குத் தன்னை அடைவதற்கு முக்ய ஸாதநமான பக்தி யோகத்தை இந்தக் கீதா சாஸ்த்ரத்தினால் அர்ஜுநனை வ்யாஜீகரித்து உபதேசித்தான். நாள்தோறும் அப்யாஸத்தால் உண்டு பண்ணத்தக்க அதிசயத்துடன் கூடியதும், சரீரத்தைவிட்டு ஜீவாத்மா உத்க்ரமிக்கிற காலம் வரையில் அநுவர்த்திக்கத் தக்கதும், மிக்க விசதமான ப்ரத்யக்ஷத்திற்கு ஸமாநமான ஸ்வரூபத்துடன் கூடியதும், தைலதாரைபோல் இடைவெளியற்றுத் தொடர்ச்சியாக மேல்மேல் வ்ருத்தியடைந்து வருகின்றதுமான ஸ்ம்ருதி ஸந்ததிதான் பக்தி என்று சொல்லப்படுகிறது. இந்தப் பக்தியானது ஸத்வ விவ்ருத்தியினால் ஸாதிக்கத்தக்கது. இந்த ஸத்வ விவ்ருத்திக்கு விரோதிகள் ரஜஸ் தமஸ் இரண்டும். இவைகள் உத்கரிப்பதற்கு நிமித்தமாயுள்ள பாபங்களை நாசமடையச் செய்து, ஸத்வவிவ்ருத்திக்கு ஹேதுவாக இருப்பதால் ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநத்தை முன்னிட்டு ஸங்கத்யாகம் பலத்யாகம் கர்த்ருத்வத்யாகங்களைச் செய்து, பரம புருஷாராதந புத்தியினால் நித்ய நைமித்திக கர்மாக்கள் அநுஷ்டிக்கத் தக்கவைகள் என்பதை இந்தச் சாஸ்த்ரம் விசதமாக உபதேசிப்பதுடன், காம்ய கர்மாக்களையும் அந்தந்தக் கர்மோத்தேச்யங்களான காம்யபலங்களை த்யஜித்து, நித்ய நைமித்திகங்களோடு சேர்த்துப் பகவதாராதநரூபங்களென்று எண்ணி அநுஷ்டித்தால், அவைகளும் நிச்ரேயஸ ஸாதநங்களாகுமென்றும் ஸ்பஷ்டமாகப் பரமபுருஷன் அருளிச்செய்தான். இந்தப் பக்தி யோகாநுஷ்டாநமானது சக்தியுள்ளவர்களாலேயே ஸாதிக்கத் தகுந்ததாதலால் இக்கலியில் அவ்விதமான மநோதார்ட்யமுள்ள உத்தமாதிகாரிகள் தேடத்தக்கவர்களென்று எண்ணியே பரமபுருஷன் எளிதில் எல்லோராலும் அநுஷ்டிக்கத் தக்கதான ப்ரபத்தி சாஸ்த்ரத்தைக் கடைசியில் “ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ | அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ||” என்று பக்தியோகாநுஷ்டாநத்தில் அசக்தர்களான அதிகாரிகளை உத்தேசித்துக் கருணைகூர்ந்து திருவாய்மலர்ந்த

ருளி, தன்னவதார ரஹஸ்யத்தைத் தலைக்கட்டினான். இந்தக் கீதாசாஸ்த்ரத்தை ஆமூலாக்ரம் பராமர்சித்துப் பார்த்தால் இதுதான் பகவதபிப்ராயமென்று நன்கு வெளியாகிறது ; இதுவே கீதாசாஸ்த்ரத்தின் பரமதாத்பர்யம் என்றும் புலப்படுகிறது. அதாவது மநுஷ்ய ஜந்மாவை எடுத்தவன் எந்த வகுப்பினனாக இருந்தாலும் அவன் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிற விதிநிஷேதங்களை அவச்யம் அநுஸரிக்கக்கடவன். அந்தந்த வகுப்புக்கு ஏற்பட்ட கர்மாக்களை அவனவன் அவசியம் அநுஷ்டிக்கவேண்டும். பலனைக் கருதலாகாது. "இது அவச்யம் என்னால் செய்யத்தக்கது; செய்யாமலிருந்தால் பகவந் நிக்ரஹத்துக்குப் பாத்ரமாவேன்" என்று எண்ணிக் கடமை என்றே கர்மாக்களை மனிதன் செய்யவேண்டும். அவனவன் வினைகளை அநுஸரித்துப் பல தாநம் செய்பவன் ஸர்வசக்தனான பரமபுருஷன். ஈச்வரன் கொடுத்த பராதீந கர்த்ருத்வத்தைக் கைக்கொண்டு, கர்மாநுஸாரமாக மனிதன் கர்மாக்களைச் செய்யக் கட்டுப்பட்டிருக்கிறான். விசேஷமான பகவதநுக்ரஹத்தினால் நல்ல நிலைமை அடைந்திருக்கிற ஒருவன் 'நான் நல்ல பதவியைப் பெற்றிருக்கிறேன், இனி எனக்கு என்ன குறை?' என்று இறுமாந்திராமல், கீழ் நிலைமையிலிருக்கிற எல்லோரையும் நல்வழிப்படுத்தி, மேல் பதவியை அடைவிக்க முயற்சி செய்யவேண்டுவது அவசியம். மனிதனுக்கு ஐஹிகங்களாகவும் ஆமுஷ்மிகங்களாகவும் உள்ள எல்லாக் கர்மாநுஷ்டாநங்களிலும் சாஸ்த்ரமே கைவிளக்கு. அஜ்ஞாநாந்தகாரத்தினால் மூடப்பட்ட இவ்வுலகின்கண் வஸிக்கிற எல்லா ப்ராணிகளும் முற் கூறப்பட்ட சாஸ்த்ர விளக்கை உள்ளத்தி லேந்திக் கர்மயோகங்களை அநுஷ்டித்துப் பாபங்களைத் தொலைத்துச் சித்த சுத்தியை அடைந்து ஜ்ஞாநயோகத்தை நாடி யோக முகத்தால் ஆத்மாவலோகநம் பிறந்து பக்தியோகத்திலிழிந்து பரபக்தி பரஜ்ஞாநம் பரமபக்தி பர்வாக்களை ஏறியோ அல்லது ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டு அங்கபஞ்சக ஸம்பந்நமான ப்ரபத்தியினாலோ ஸம்ஸாராந்தகாரத்தை நிரஸித்து அகண்ட பரிபூர்ண ப்ரஹ்மாநந்தாநுபவரூபமான ஸாயுஜ்யத்தை எல்லோரும் அடைந்து, மீண்டும் பவக்குழியில் வீழ்ந்து ஆறாத் துயரமடையாமல் ஸ்ரீ பரமபதத்திலேயே நிலைபெற்றிருத்தலைச் சொல்வதே ஸ்ரீ கீதையின் பரம தாத்பர்யம்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

ஸ்ரீ தேசிகாவதார ரஹஸ்ய சிந்தநம்.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

கவிதார்க்கிக ஸிம்ஹமாகிய நம் தேசிகன் அவதரித்தது, விபவ ஸம்வத்ஸரமா? சுக்ல ஸம்வத்ஸரமா? என்று ஓர் விவாதம் ப்ரஸ்துதமாய் இருக்கிறது. த்ருதீய ப்ரும்ஹதந்த்ர ஸ்வாமி அருளிச்செய்த குருபரம்பரா ப்ரபாவம் முன்னோர்கள் அருளிச்செய்த ப்ரபந்தாநுஸந்தாந தீபிகை ஆகிய இவைகளையும், எம்பெருமானார் அந்த்ய தசையில் அருகிலிருந்த ஸ்ரீபாதத்து முதலிகளில் ஆர்த்யதிசயம் கண்டு அவர்களைக் கொங்கில் பிராட்டியினிடம் போகும்படி நியமித்ததையும், அங்கு நடந்த வ்ருத்தாந்தமாகிய ஐதிஹ்யத்தையும் ஆராய்ந்தால், ஸ்ரீ ஸ்வாமியின் திருவவதார வர்ஷம் சுக்ல வர்ஷமென்றே ஏற்படுகிறது. குருபரம்பரையிலும் ப்ரபந்தாநுஸந்தாந தீபிகையிலும் கலி 4371—ஆவதான சுக்ல வர்ஷம் புரட்டாசியீ சுக்ல தசமி புதன்கிழமை கூடின திருவோண நக்ஷத்ரம் தேசிகன் திருவவதரித்த திநம் என்றிருக்கிறது. "ஸ்ரீயியொமெஹமகெ மாக்ஷு உதஹமெஜெங்கடெஹாரா: । ருஜூவ்ராயெ ஜகெவ்ராயாக் வளஜெஹ்ந வாரம் வதம் ॥" என்கிற ச்லோகமும் ப்ராசீநமாய் அநுஸந்திக்கப்பட்டு வருகிறது. எம்பெருமானார் அந்த்ய தசையில் நிகழ்ந்த ஐதிஹ்யம் என்னவென்றால், ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரர் திருமேனி தளர்ந்து நோவு சாத்திக்கொண்டிருக்கையில் ஸ்ரீபாதத்து முதலிகள் ஸ்வாமியின் விச்லேஷத்தில் "என் செய்வோம்? இனி இந்த ஸம்ப்ரதாயத்தை நிர்வஹிப்பவர் யாவர்?" என்று கிந்நர்களாய் இருப்பதை அறிந்த ஸ்வாமி, இவர்களைக் கொங்கில் பிராட்டியினிடம் போகும்படி நியமிக்க, இவர்களும் அந்த அம்மாள் திருமாளிகைக்குப் போய் ஸ்வாமியின் நியமநத்தை விஜ்ஞாபித்தனர். அதற்கு அந்த அம்மாளும் இவர்கள் பார்த்திருக்கையில் ஓர் ஆஸநத்தில் அமர்ந்து, தம் திருக்குழல் கற்றையை வாரி ஓர் சிவப்பு நூலினால் கட்டி, மறுபடியும் அதை அவிழ்த்து அந்த ஸூத்ரத்தை மறைத்து, மறுபடியும் தம் குழல் கற்றையைத் தந்தத்தின் சீப்பால் வாரி ஒரு வெள்ளை நூலினால் முடிந்து, 'நீங்கள் போகலாம்' என்று விடை கொடுத்தாள். அப்போது அவர்கள் ஒன்றும் தோன்றாதவராய், ஸ்வாமி ஸந்நிதி

யில் நடந்த ஸங்கதியை விண்ணப்பம் செய்ய, எம்பெருமானும் " அறிவிலிகாள்! "ஸஹஸ்ரம்வத்ஸரம் வ்யாப்யதி விஷ்ணோ:" என்கிறபடி க்ருஷ்ண வர்ணத்தை வாஸுதே வன் அடைந்திருக்கிற கலியில் பிங்களமான வர்ஷத்தில் க்ருஷ்ண பக்ஷா நுவர்த்தி யுள்ள பஞ்சமியில் தாமஸ தேவதாகமான ஆதிரையில் நாம் அவதரித்த குறைதீர சுக்லமான வர்ஷத்தில் தடித் ப்ரபானஹ்ரிஷீகேசதேவதாகமான புரட்டாசி மாஸத்தில் சுக்ல பக்ஷத்தில் சசிவர்ண விஷ்ணு தேவதாகமான திருவோண நக்ஷத்ரத்தில் பாண்டர பராக ஒரு திருவவதாரம் பண்ணக்கடவோம்; அதைத்தான் கொங்கில் பிராட்டி உங்களுக்குப் பரோக்ஷமாக நிர்த்தேசித்துக் காட்டினாள். அந்தப் பிராட்டி ஸாக்ஷாத் வேதமூர்த்தி; அவளுடைய திருக்குழல்கள் வேதாந்தங்கள்; அதை வாரி முடித்துச் சிவப்பு நூலினால் கட்டினது, காஷாயாம்பர தாரியான நாம் பண்ணின ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநம்; அந்தச் சிவப்பு நூலை மறைத்தது, நமது அவதார ஸமாப்தம். பிறகு வெள்ளை நூலினால் அமரும்படி வாரி முடித்தது, இனி பவிஷ்யத் ஆசார்யராக நாம் சுக்லாம்பர தாரியாக அவதரித்துப் பஹுமுக க்ரந்தங்களைப் பண்ணி, இந்த ஸம்ப்ரதாயத்தை விளங்கச் செய்யப் போவதைக் காண்பிக்கிறது. ஆகையால் நீங்கள் ஒன்றுக்கும் கரைய வேண்டாம் " என்று அவற்றின் கருத்தை விளங்க ஸாதித்தருளினர். " த்ரயந்த ஸரஸ்வதீ திசுபாலது வெளுமயூகா, ஸ்ரீஹாரீதம்ஸா அபூ ஸம்ய திவா: இத்யாதிகளை இங்கு அநுஸந்திப்பது. சுக்ல வர்ஷமானால் தான் ஸௌம்ய வருஷத்துக்கு நூறு வர்ஷம் பூர்த்தியாகிறது. ஒரு நூற்றாண்டு எழுந்தருளியிருந்தவர்களையே 'இன்னு மொரு நூற்றாண்டிரும்' என்று வாழ்த்தும் வாழித் திருநாமமும் ஸங்கதமாகும். " விஹவாஸ்வஸ்ஸம்பூதஸ்: " என்று இருப்பதற்குக் கதி என் என்னில்: ரோஹிணியில் அவதரித்த க்ருஷ்ணனை " அத்தத்தின் பத்தாநாள் தோன்றிய வச்சுதன் " என்றும், " நீ பிறந்த திருவோணம் " என்றும், ஸ்வாதியில் அவதரித்த ந்ருஸிம்ஹனைத் " திருவோணத் திருவிழவி லந்தியம்போதி லரியுருவாகி யரியை யழித்தவனை " என்றும் அவதரித்த காலத்தை மறைத்துப் பேசுவது உண்டு. நண்ணாதார் அபிசாராதிகள் செய்யாமைக்காக. அன்றேல் விபவ என்று க-ட-ப-யாதி க்ரமத்தால் (4—4—4) மூ நான்கு—12ஆய், 1+2 இந்த எண்களைக் கூட்டினால் மூன்றாய் சுக்ல வர்ஷமாகிறது. இதுவு மன்றியில் 'விஹவாஸ்வம்' என்றால் " விஹ வெ ஹி நாமநாம க்ருஷ்ணாதி வ்யாபூஹஸ்வமண: நாமக்ருஷ்ண நரஸிம்ஹாஸ்வ வணுஷாஸ்ரண்யவிமஹா: " என்று ஷாட்குண்ய பூர்ண விபவம் மூன்றாகையால் தத்ஸம ஸங்க்யாகமான வர்ஷம் மூன்றாவதான சுக்ல வர்ஷம் தான். " இதி ஜநுரஹஸ்யம் யோவேத்தி நாஸ்யவதஹவ: "

பெருமாள் கோவில்

தாயார் ஸந்நிதி வரததாஸன்,

ஸ்ரீ:

விமர்சம்.

(1) ஆரோக்ய தீபிகை.

இப்பெயருடைய ஒரு மாஸாந்தரத் தமிழ்ப்பத்ரிகை நாம் வரப் பெற்றோம். சென்னையில் பஹுகாலமாக ஆரோக்ய சாஸ்த்ரப் பயிற்சியைச் செய்து கொண்டு அந்தப் பயிற்சியின் பலமாக மஹாஜநங்களுக்குத் தம்மால் இயன்ற வரையில் உபகரித்து வரும் டாக்டர் பூ. ராமராவ் என்பவரால் இந்தப் பத்ரிகை நடத்தப்பட்டு வருகின்றது. பொது ஜநங்களுடைய ஆரோக்யத்தின் அபிவ்ருத்தியைத் தேடுவதையே அவர் இந்தப் பத்ரிகையை நடத்துவதன் முக்ய நோக்கமாகக் கைப் பற்றி இருக்கிறார். சுத்தி அசுத்தி இவைகளின் உண்மையான ஜ்ஞாநம் இல்லாமலும், வ்யாதியால் பீடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது தாம் நடந்துகொள்ள வேண்டிய ப்ரக்ரியைகளைச் சரிவர அறியாமலும், எவ்வித நியமுமின்றிக்கே கையில் அகப்படும் ஆஹாரங்கள் எல்லாவற்றையும் புஜித்துக் கொண்டும் நமது ஜநங்களுள் அநேகர் வர்த்தித்து வருகிறார்கள் என்பது நிராக்ஷேபமான விஷயம். வ்யாதி ஏராளமாகப் பரவுவதற்கு இம்மாதிரியான ஜ்ஞாநக்குறைவுடன் கூடிய அநியத வ்ருத்தியே முக்யமான காரணம்.

இந்த அஜ்ஞாநத்தை நிவ்ருத்தி செய்து ஆஹாராதிகளில் ஒருவித சுத்தியையும் நியமத்ஸதயும் ஜநங்களுக்குள் பரவச் செய்தால், இந்த லோகத்தில் வ்யாதியின் ப்ரசாரம் தடைபடும் என்பது நிச்சயமே. அம்மாதிரியான ஜ்ஞாந ப்ரசாரம் இந்தப் பத்ரிகையால் ஏற்படுகின்றது என்பதை அந்தப் பத்ரிகையைப் படிக்கும் நாம் அறிகின்றோம். இந்தப் பத்ரிகையைப் பற்றிய மற்றை விஷயங்களை "323, தம்புசெட்டித் தெரு, சென்னை" என்னும் விலாஸத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

(2) ஜிஜ்ஞாஸை.

இப்பெயர் பூண்ட ஒரு இங்க்லிஷ் பத்ரிகை நமக்குக் கிடைத்திருக்கின்றது. சென்னை மயிலாப்பூரில் இருக்கும் ப்ரஹ்ம ஸ்ரீ வைத்ய விசாரத கே. ஜி. நடேசசாஸ்த்ரிகளும், ப்ரஹ்ம ஸ்ரீ. ஜி. ஸுப்ரஹ்மண்ய சர்மா என்பவரும் இந்தப் பத்ரிகையின் ஸம்பாதகர்கள் என்று தெரிய வருகின்றது. இக்காலத்து ரீதியை அநுஸரித்து வேதாந்த விசாரம் செய்வது அவர்களுடைய முக்ய நோக்கம் என்றும் நாம் அறிகிறோம். நமக்குக் கிடைத்திருக்கும் ஸஞ்சிகைகளிலிருந்து, அநேக வ்யுத்பந்நர்கள் விஷய ப்ரதாநம் முதலியவற்றைச் செய்து, இந்தப் பத்ரிகையை ஆதரிக்க முன் வந்திருக்கிறார்கள் என்றும் ஏற்படுகின்றது. இம்மாதிரியான பத்ரிகை ஒன்று வெளிவருவதைப் பற்றி நாம் மிகவும் ஸந்தோஷிக்கிறோம்.

வேதாந்த விசாரம் என்பது ஸாமாந்யமாக எல்லாராலும் ஸாதிக்கக்கூடிய விஷயமன்று. ஸத் ஸங்கத்தால் ஏற்படும் ஸம்ஸ்காராதிகளும் குருமுகத்தால் நிஷ்பந்நமாகும் ஜ்ஞாந பூர்த்தியும் சாஸ்த்ர விஷயத்தில் ஒருவித ருஜுவான மநோபாவமும் அந்த விசாரத்தைச் சரிவரச் செய்வதற்கு அவசியம் அபேக்ஷிதங்கள். இக்காலத்தில் இவை ஒன்

றும் இல்லாமலே, அநேக மிதஜ்ஞர்கள் இந்த விசாரத்தில் ப்ரவ்ருத்தித்து, தமது புத்திக்குத் தோன்றினபடியெல்லாம் அஸங்கதங்களான நிர்ணயங்களைச் செய்துகொண்டு அந்த நிர்ணயங்களைப் பஹு முகமாக ப்ரசுரித்தும் வருகிறார்கள். இம்மாதிரியான அபத ப்ரவ்ருத்தியை யதாசக்தி தடுக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் வெளிவரும் இந்தப் பத்ரிகையை நாம் ஹார்த்தமான விச்வாஸத்துடன் ஸ்வாகத பூர்வம் ஆதரிக்கின்றோம். ப்ரதி வருஷமும் நன்னான்கு ஸஞ்சிகைகள் ப்ரசுரிக்கப்படுமென்றும், வருஷம் 1-க்குச் சந்தா ரூ. 5—0—0 என்றும் அந்தப் பத்ரிகையின் ப்ரகடநச் சீட்டுக்களிலிருந்து வெளிப்படுகின்றது. இதைப்பற்றிய மற்றை அம்சங்களை அபேக்ஷிக்கிறவர்கள், "சென்னை, மயிலாப்பூர், 2-30 நாச்சியப்ப செட்டித் தெரு" என்னும் விலாஸத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

(3) உத்யாந பத்ரிகை.

இது ஒரு ஸம்ஸ்க்ருத மாஸாந்தர பத்ரிகை; நாகரலிபியில் அச்சுப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. தஞ்சாவூர் ஜில்லா திருவாதி என்னும் ஸ்தலத்தில் இருக்கும் ஸ்ரீமாந் டி. டி. தாதாசார்ய சிரோமணி என்னும் ஒரு வித்வாந் இதன் நிர்வாஹக ஸம்பாதகர். இதன் லக்ஷ்யங்களுள் முக்யமானது என்னவென்றால்—ஸம்ஸ்க்ருத பாஷையில், மற்றை பாஷைகளில் போல, எழுதுவதும் ஸம்பாஷிப்பதுமான ஸம்ப்ரதாயத்தைப் பூர்வகாலத்தில் இருந்தது போலத் திரும்பவும் ஏற்படுத்த வேண்டும் என்பதே. நமது தேசத்தின் அபிவ்ருத்திக்கும் மதத்தின் அபிவ்ருத்திக்கும் இன்னும் மற்றை ச்ரேயஸ்ஸுக்கும் ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞாநம் அபேக்ஷிதமாதலால், அந்தப் பாஷா ஜ்ஞாநத்தைப் பரவச் செய்வதில் நோக்கமுள்ள இந்தப் பத்ரிகையை ஜகத்தின் ஹிதத்தை இச்சிக்கும் எல்லா ஜநங்களும் ஆதரிக்க வேண்டும் என்பது அவசியம். இதன் வர்ஷச் சந்தா ரூ. 1—0—0. "தஞ்சாவூருக் கடுத்த திருவாதி, தந்த்ரோத்யாநம், ஸ்ரீமாந் டி. டி. தாதாசார்ய சிரோமணி" என்னும் விலாஸத்திற்கு எழுதி இந்தப் பத்ரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

(4) உபந்யாஸங்கள்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் நிர்வாஹகர்கள் சென்ற வர்ஷங்களிற் போல இவ்வர்ஷத்திலும் சில பண்டித உபந்யாஸங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஸ்ரீமாந் வி. வி. வெங்கடரமண ஐயங்கார் ஸ்வாமியால் இவ்வர்ஷத்திய உபந்யாஸங்களை உத்தேசித்துச் செய்யப்பட்டிருக்கும் உதாரமான த்ரவ்ய ஸஹாயத்தை ஆதாரமாகக் கொண்டு ஸபையின் நிர்வாஹகர்கள், புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப வித்வாந் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை, கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களிலுள்ள மஹாஜநங்களுக்கு உபகாரமாக இவ்வர்ஷத்திய உபந்யாஸங்களைச் செய்யும்படி ப்ரார்த்திக்கவே, அந்த ஸ்வாமி, அந்த ப்ரார்த்தநைக்கு இணங்கி சென்ற சில தினங்களாகக் கோயம்புத்தூர் பட்டணத்தில் 7, 8 உபந்யாஸங்களைச் செய்துவருவதாக நாம் அறிகிறோம். ஸ்ரீமாந் வெங்கடரமண ஐயங்கார் ஸ்வாமியும், ஸ்ரீமாந் பி. என். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும், இன்னும் அந்த ஸ்தலத்திலுள்ள சில ஆஸ்திகர்களும் இந்த விஷயத்தில் மிக்க ச்ரத்தையை எடுத்துக்கொண்டு உபந்யாஸங்களை நடத்திவைக்கிறார்களாம்; அநேக ஜநங்கள் இவைகளைக்கேட்டு ஆநந்திக்கிறார்களாம். உபந்யாஸங்களின் ஸங்க்ரஹம் தீபிகையில் அடுத்த ஸஞ்சிகை முதல் ப்ரசுரிக்கப்படும்.

ஸ்ரீ. வை. ஸி. ஸபை கார்யதர்சி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

[illegible]

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீ. யு. பி. க்ருஷ்ணமாசார்யரும் மஹாத்மா காந்தியும்.

நமது ஹிந்துமத ஸம்பந்தமாகப் பற்பல விடங்களில் ச்லாக்யங்களான ப்ரஸங்கங்களைச் செய்துகொண்டு நமது மஹாஜநங்களுக்கு அந்த மதத்தில் ஒரு ஆதராதிசயத்தை ஜநிப்பித்துவரும் ஸ்ரீமாந் யு. பி. க்ருஷ்ணமாசார்யர் என்னும் ஆஸ்திகர், விதவா விவாஹம் ப்ரௌடா விவாஹம் அஸ்ப்ருச்யத்வம் முதலிய விஷயங்களைப்பற்றி, சாஸ்த்ர விருத்தமாகச் சில அபிப்ராயங்களை ஸமீப காலத்தில் வெளிப்படுத்திவரும் மஹாத்மா காந்தியை, தடஸ்தர்களான வித்வான்களுடைய முன்னிலையில் தன்னுடன் அந்த விஷயங்களைப் பற்றி வாதம் செய்வதற்காக ஆஹ்வாநம் செய்திருக்கிறார். அந்த ஆஹ்வாந பத்ரிகையின் ஒரு ப்ரதியை நாம் வரப்பெற்றோம். அது பாஷாந்தரத்தில் எழுதப்பட்டிருக்கிறபடியால், நமது தீபிகையில் அதை ப்ரசுரிக்க ஸாத்யப்படவில்லை. அதன் விஷயத்தை மாத்ரம் நமது அபிமாநிகளுக்கு ஸங்க்ரஹமாகத் தெரிவித்துக் கொள்வதுடன், அதைப் பற்றி நமக்குத் தோன்றும் அபிப்ராயத்தையும் இவ்விடத்தில் எழுதத் துணிகின்றோம்.

விதவா விவாஹம் முதலிய சீர் திருத்தங்களைச் செய்வதற்கு நமது சாஸ்த்ரங்கள் இடம் கொடுக்கவில்லை யென்றும், சாஸ்த்ரங்கள் இடம் கொடுக்

கின்றன வென்று மஹாத்மா சொல்லும் பக்ஷத்தில் 'சாஸ்த்ரத்தின் உண்மையான அபிப்ராயம் என்ன?' என்பதை நிர்ணயிக்க வேண்டுவது அவச்யமாதலால் அந்த நிர்ணயத்தின் பொருட்டு இந்த வாதத்திற்கு, அவர், தம்மால் ஆஹ்வாநம் செய்யப்படுகிறாரென்றும், ஒருகால் சாஸ்த்ரங்களை அநாதரித்து யுக்தி பலங்களைக்கொண்டு மஹா ஜநங்களுடைய ஸௌக்யம் மற்றை ச்ரேயஸ் இவைகளின் அபிவ்ருத்திக்கு இம்மாதிரியான சீர்திருத்தங்கள் அவச்யம் அபேக்ஷிதங்களென்று அவர் அபிப்ராயப்பட்டிருந்தால் அது தவறுதலான அபிப்ராயமென்றும், இந்தச் சீர்திருத்தங்கள் மிக்க தீமையை விளைவிக்குமே தவிர எவ்வித ச்ரேயஸ்ஸுக்கும் காரணமாகமாட்டா வென்றும் ஸ்ரீ. யு. பி. க்ருஷ்ணமாசார்யர் அபிப்ராயப்படுகிறார். இவைகளைப்பற்றி நேரில் வாதம் செய்வதே ஒருவித நிர்ணயத்தை ஏற்படுத்து மென்றும் அவர் நினைக்கிறார் போலும்.

மஹாத்மா காந்தியால் வாதிக்கப்பட்டு வரும் சீர்திருந்தங்களெல்லாவற்றையும் சாஸ்த்ரங்களுக்கு ஒத்தவையென்றாவது லௌகிக ச்ரேயஸ்ஸுக்கு உபகாரகங்களென்றாவது நாம் அங்கீகரிக்க ஸந்நத்தராக இல்லை. அப்படி இருந்தபோதிலும், ஸ்ரீமாந் க்ருஷ்ணமாசார்யர் நினைப்பது போல, இந்த விஷயத்தில், வாதம் ஒரு விதமான நிர்ணயத்தை ஏற்படுத்திவிடுமென்றாவது, அந்த நிர்ணயத்தால் ஜநங்களின் அநுஷ்டானங்கள் நிலைபெற்றுவிடு மென்றாவது நினைக்க நாம் அசக்தராகவே இருக்கிறோம். மத்யஸ்தர்களாற் செய்யப்படும் நிர்ணயம் எவ்விடத்தில் வாத ஸம்பத்தரான ஜநங்களெல்லாரையும் கட்டுப் படுத்துமோ அவ்விடத்தில் மாத்ரம் வாதம் செய்வது ஸபலமாகும். ப்ரக்ருத விஷயம் அம்மாதிரியான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதன்று. மத விஷயங்களிலும் ஆசார விஷயங்களிலும் ஒவ்வொருவருடைய நடத்தையும் அவரவருடைய அந்த:கரண சுத்தியைச் சார்ந்ததே. வ்யபதிஷ்டரென்று சொல்லப்படும் சில தடஸ்தர்களால் ஸாதுவென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆசாரத்தை ஒருவன் அஸாதுவென்று ச்ரஹித்து அதற்கு விபரீதமாக அநுஷ்டிக்க அவன் ப்ரயத்நப்பட்டால், அவனை நாம் அவ்விதமான அநுஷ்டானத்திலிருந்து எப்படி தடுக்கக் கூடும்? அப்படி தடுப்பது ஸாத்யமில்லாமல் இருந்தால், தடஸ்தர்களாற் செய்யப்படும் நிர்ணயங்கள் நிஷ்பலங்களே ஆகுமன்றோ?

தவிரவும், இக்காலத்தில் கணக்கற்ற லோக வ்ருத்தாந்த பத்ரிகைகள் அச்சுப்பதிப்பிக்கப்பட்டு ப்ரதி திநமும் ஆயிரக்கணக்காக வெளி வருகின்றன. அவைகளில் ப்ரக்ருத விஷயம் போன்ற வஸ்துக்களின் விசாரத்தை ஆத்ருப்தி செய்யக்கூடும். எழுதப் படிக்க அபேக்ஷிதமான ஜ்ஞாநமும் ஜநங்களுக்குள் முன் காலத்தைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாகப் பரவி இருக்கின்றதாகையால், அந்தப் பத்ரிகைகளில் வெளிவரும் விஷய விசாரங்களை மஹாஜநங்கள் படிக்கவும் அவைகளின் குண தோஷங்களை ஊன்றிப் பராமர்சிக்கவும் பூர்ணமான அவகாசமுமுண்டு. வ்யபதிஷ்டர்களின் நோக்கமும் இவைகளில் வெளிவரக்கூடுமாதலால், ஸத்வகுணம் மேலிட்டிருக்கும் ஜநங்களின் ச்ரேயஸ்ஸைத் தேடிக் கொடுக்க இதுவே போதுமான உபாயம் ஆகும். இப்படிச் செய்வதைக் காட்டிலும், குறிப்பிட்ட ஓரிடத்தில் சிலர் மாத்ரம் சேர்ந்து சிற்சில மத்யஸ்தர்களின் முன்னிலையில் ஸ்வல்ப ஜநங்களுக்கு மாத்ரம் கோசரமாகும்படியும், தீர்க்கமாச விஷய பர்யாலோசனையை முன்னிட்டுப் பூர்வபக்ஷ ஸித்தாந்தங்களைச் செய்வதற்கு அவகாசம் கொடுக்காமலும் வாதம் செய்வது எவ்விதத்தில் ச்லாக்யமென்று நமக்கு விளங்கவில்லை.

காலம் விபரீதமாக இருக்கின்றது என்பது உண்மையே. பண்டைக் காலத்து ஆசாரங்களெல்லாம் மாறிவருகின்றன. ப்ரத்யக்ஷம் ஒன்றே ஸாதுவான ப்ரமாணமாக அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. த்ரிகால ஜ்ஞாநிகளான நமது ருஷிகளிடத்தில் நம்பிக்கை குன்றிவிட்டது. ப்ராயேண ஐஹிக ச்ரேயஸ்ஸையே தேடுபவர்களாக ஜநங்கள் காணப்படுகிறார்கள். ஆத்யந்திகமான ச்ரேயஸ் மற்றொன்று உண்டு என்று நினைக்கிறவர்களும் தம் தம்முடைய புத்திக்குக் கோசரமாயுள்ள உபாயங்களாலேயே அதை ஸாதித்துக் கொள்ள ப்ரயத்நப்படுகிறார்கள். தேசாந்தரீயர்களுடைய ஸம்ஸர்க்கமும் இம்மாதிரியான ப்ரவ்ருத்திக்குப் பரமோபகாரகமாக இருக்கின்றது. இவையெல்லாம் பெருத்த தீமையின் சிந்ஹங்களாக இருக்கையிலும், நாம் ஆக்ரஹத்தையாவது நிர்பந்தத்தையாவது உபாயமாகக் கைப்பற்றக் கூடாது என்றே நினைக்கிறோம். இம்மாதிரியான விஷயங்களில் நம்மாற் செய்யப்படவேண்டிய கார்யம் என்னவென்றால், எவ்வித ஆக்ரஹமும் இன்றிக்கே ஸாந்த்வ புரஸ்ஸரமாக வஸ்து ஸ்திதியை மஹா ஜநங்களுக்கு உபந்யாஸாதிகளால் போதிப்பித்து, அந்தப் போதநத்தால் அவர்களுடைய மநஸ்ஸை ஸாதுவான மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி ஆவர்ஜ்ஜநம் செய்வதும், இன்னும் அது

போன்ற மற்றை உபாயங்களைத் தேட முயல்வதுமே. ரஜஸ் தமோ குணங்களால் ஆக்ரமிக்கப்பட்டுள்ள ஜநங்கள் விஷயத்தில் அந்த ப்ரயத்நம் பலவத்தாகாவிட்டால், அதைப்பற்றி நாம் சோகிக்கவாவது அதை ஸாதித்துக் கொள்வதற்குக் காலதேச விருத்தங்களான உபாயாந்தரங்களைத் தேட முயல்வதாவது உசிதமாகமாட்டாது. ஆகையால், ஸ்ரீமாந் க்ருஷ்ணமாசார்யர் இந்த வாதத்திலிருந்து நிவ்ருத்தராகி, யதா பூர்வம் தமது இனிமையான உபந்யாஸாதிகளால் ஜநங்களுக்கு ஹிதத்தைப் போதித்து வரவேண்டுமென்றே நாம் ஸவிநயம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறோம்.

* * *

நெல்லூரில் அடித்த பெருங்காற்று.

சென்ற ஐப்பசிமீ 16, 17உ களில் நெல்லூர் ஜில்லாவில் பெருங்காற்று அடித்து, அந்த ஜில்லாவிலும் அதற்கு ஸமீபத்திலுள்ள ப்ரதேசங்களிலும் வஸித்துவரும் ஜநங்களுக்கு மிக்க விபத்தை ஜநிப்பித்துவிட்டதென்று நாம் கேள்விப்பட அதிமாத்ரம் சோகிக்கின்றோம். ஏராளமான த்ரவ்ய நாசம் ஸம்பவித்ததுடன், அநேக ஏழை ஜநங்களுக்கு வஸிக்க க்ருஹமும் இல்லாமலும் புஜிக்க ஆஹாரமில்லாமலும் மிக்க க்லேசம் நேர்ந்திருக்கின்றதாம். துர்பிக்ஷத்தை அநுஸரித்து வரும் வ்யாதிகளும் ஜநங்களை மிகவும் பீடிக்கின்றனவாம். இவர்களுடைய ச்ரமத்தை ஒருவாறு நிவ்ருத்தி செய்வதற்காகச் சுற்று ப்ரதேசங்களிலுள்ள ப்ரபுக்களும் இதர ஜநங்களும் யதாசக்தி ப்ரயத்நப்பட்டு வருகிறார்களென்றும், ராஜாங்கத்தாரும் யதோசிதம் உதவி புரிகிறார்களென்றும் நாம் கேள்விப்படுகிறோம். இம்மாதிரியான உத்பாத காலங்களில் ஸ்ரீ சரண்யனே கடாக்ஷித்து ஜநங்களை ஸம்ரக்ஷிக்கச் சக்தனானதால், அவன் சீக்ரத்திலேயே இந்த க்ஷோபத்தை நிவ்ருத்திசெய்து தீனர்களாயுள்ள ப்ரஜைகளுக்கு யதா பூர்வம் ச்ரேயஸ்ஸை அநுக்ரஹிக்க வேணுமென்று நாம் ஹார்த்தமாகப் ப்ரார்த்திக்கிறோம்.

க்ஷ்வம் விரோத்ஸும் ப்ரத்யக்ஷம் | ஸம்ஸ்தாநவத் ஸம்ஸ்தாநிந: ப்ரகாரதயா

ஏதேநைவ.........விஷ்டீ:—சிலர், பேதாபேதம் என்று ஒரு மதம் கொள்கின்றார்கள். அவர்கள் சொல்வதாவது—ஒவ்வொரு பதார்த்தமும் மற்றொரு பதார்த்தத்தைக் காட்டிலும் வேறு பட்டதாகவும் இருக்கின்றது, வேறு படாததாகவும் இருக்கின்றது என்பது தான். அதாவது, ஒரே பதார்த்தத்தில் பரஸ்பரம் விருத்தங்களான பிந்

நிகளும் க்ரஹிக்கப்படுகின்றன. மாடு என்னும் ஒரே சப்தத்தால் கொம்பு ஒடிந்த மாடு கொம்பு இல்லாத மாடு, எல்லா மாடுகளும் சொல்லப்படுகின்றனவன்றோ? அது போல் இந்த ஒரே சப்தத்தால் அநுவித்தமான ப்ரத்யயமும் ஜாதி வ்யக்திகளின் ஐக்யத்தை விளக்குகின்றது. நான்காவது ஹேதுவும் ஒன்று உண்டு. ப்ரதம பிண்ட க்ரஹணத்தில் ஜாதி வ்யக்திகள் இரண்டிற்கும் எவ்வித பேதமும் இல்லாமல் ப்ரத்யயம் ஏற்படுகின்றதன்றோ? அவைகள் அபிந்நங்களாக இல்லாவிட்டால் அப்படிப்பட்ட ப்ரத்யயம் ஸம்பவிக்க மாட்டாதாகையால், அவை அபிந்நங்கள் தாம் என்பதற்கு இதுவும் ஒரு ஹேது. இம்மாதிரியே வைதிகங்களான அர்த்தங்களிலும் பேதாபேதம் உண்டென்பது அவர்களுடைய மதம். அசித் வஸ்துக்களும் ப்ரஹ்மமும், சித்வஸ்துக்களும் ப்ரஹ்மமும் பரஸ்பரம் பிந்நாபிந்நங்களேயாம். இதற்கு ச்ருதி வாக்யங்களே ப்ரமாணம். ப்ரதீதி இவ்விடத்தில் ப்ரமாணமாக மாட்டாது.

இப்படி இவர்கள் செய்யும் உபபாதநம் எல்லாவற்றையும் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே இவ்விடத்தில் "ஏதேநைவ" இத்யாதியான வாக்யத்தை அநுக்ரஹித்திருக்கிறார். ஏதேநைவ—இந்தக் காரணத்தினாலேயே. கீழ், நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்திலும் விசேஷத்துடன் கூடியதாகவே க்ரஹணம் ஏற்படுகிறதென்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் காரணத்தாலேயே பேதாபேத மதம் ப்ரத்யுக்தமாகின்றது என்பது தாத்பர்யம். விசேஷண விசேஷ்ய பாவம் எப்பொழுதும் பேதகம். ப்ரதம பிண்ட க்ரஹணத்திலும் ஸம்ஸ்தாநத்துடன் (அமைப்புடன்) ப்ரதீதி ஏற்படுகிறபடியால் ப்ரகார ப்ரகாரிகள் பிந்நங்களாக க்ரஹிக்கப்படுவதுபோல ஜாதிவ்யக்திகளும் பிந்நங்களாக க்ரஹிக்கப் படுகின்றனவே தவிர அபிந்நங்களாக க்ரஹிக்கப்படவில்லை என்பது வ்யக்தம்.

பிந்நாபிந்நரூபேண த்வ்யாத்மகத்வம் விரோத்ஸ்யதி—ஒரு பதார்த்தத்திற்கு த்விரூபத்வம் எப்பொழுதும் விருத்தமன்று; பிந்நாபிந்ந ரூபமாக இருக்கும் பொழுது மாத்ரம் அது விருத்தமாகும்.

ஸம்ஸ்தாநவத்—ஸாஸ்நா (மடி) முதலியவைகளாகிற அமைப்பின் விசேஷம், பசுவுக்கு ஸம்ஸ்தாநம்; பசு ஸம்ஸ்தாநி. ஆகையால் ஸம்ஸ்தாநமானது ஸம்ஸ்தாநிக்கு ப்ரகாரம்; அப்படி ப்ரகாரமாகிறபடியால் அது ஸம்ஸ்தாநியைக் காட்டிலும் வேறான பதார்த்தமே.

ஸதாபாஸமாநத்வாத் ; ப்ரகாரஸ்யைவ வ்யக்த்யுபலம்பகத்வம் வ்யதிரேகஸம்பந்தஸ்யேதி ந அநாத்மகத்வஸித்தி: ।

அபிந்ந ரூபங்களை உடைய இரண்டு ஆகாரங்கள் உண்டு என்று சொன்னதாயிற்று. இந்த வாதமும் கீழ்க் கூறப்பட்டுள்ள காரணத்தாலேயே நிரஸ்த மாகிவிட்டது. அமைப்பு என்பது, அந்த அமைப்பை உடைய வஸ்துவுக்கு ஒரு ப்ரகாரம்; ஆகையால் அந்த வஸ்துவைக் காட்டிலும் அது வேறுபட்ட பதார்த்தமே. அப்படி அது ப்ரகாரமாக இருக்கும் காரணத்தாலேயே அது தனித்து நிற்கவும் யோக்யமன்று, தனித்து க்ரஹணமும் அதற்கு ஸம்பவிக்க மாட்டாது; ஆகையால், பிந்ந அபிந்ந ரூபமான இரண்டு விருத்த ஆகாரங்கள் ஒரே வஸ்துவுக்கு ஸித்திக்க மாட்டா.

ப்ரகாரதயா—ப்ரகாரமாக இருப்பதே, ஸம்ஸ்தாநம் ஸம்ஸ்தாநியைக் காட்டிலும் வேறான பதார்த்தம் என்பதற்கு ஹேது.

ப்ரகாரஸ்யைவ வ்யக்த்யுபலம்பகத்வம் வ்யதிரேகஸம்பந்தஸ்ய—ஜாதி வ்யக்திகளுக்குப் பரஸ்பரம் அபேதம் உண்டு என்பதற்கு நான்கு ஹேதுக்கள் உபபாதிக்கப்பட்டனவன்றோ? அந்நான்கு ஹேதுக்களையும் இந்த வாக்யத்தால் பரிஹரிக்கிறார். அவைகளுள் முதல் ஹேது ஸாமாநாதிகரண்யம். 'இந்தக் குடம் மண்' என்னும் இடத்தில் விசேஷண விசேஷ்யங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் சொல்வது அவைகளின் ஐக்யத்தாலன்று. ஆனால் அந்த விசேஷணம் அப்ருதக் ஸித்த விசேஷணமாக இருப்பதால். எந்த விசேஷணம் விசேஷ்யத்தை விட்டுத் தனித்து நிற்க அநர்ஹமோ அது அப்ருதக் ஸித்த விசேஷணம். ஜாதி வ்யக்திகளுக்கும் அப்படிப்பட்ட ஸம்பந்தமே. "ப்ரகாரஸ்யைவ வ்யக்த்யுபலம்பகத்வம்" என்பதால் இது ஏற்படுகின்றது. "ப்ரகாரஸ்யைவ" என்பதற்கு "நியதப்ரகாரஸ்யைவ" என்பது அர்த்தம். இரண்டாவது ஹேது, எப்பொழுதும் ஜாதியும் வ்யக்தியும் சேர்ந்தே க்ரஹிக்கப்படுகின்றன என்பது. இது அபேதத்திற்கு ஹேதுவாக மாட்டாது. 'சேர்ந்து க்ரஹிக்கப்படுகின்றன' என்பதே பேதத்தைக் காண்பிக்கின்றதன்றோ ? வஸ்து ஒன்றாக இருந்தால், சேர்ந்து க்ரஹிக்கப்படுகின்றன என்று எவ்விதம் சொல்லக்கூடும் ? ஆகையால் இது அபேதத்திற்கு ஹேதுவாகமாட்டாது. ஆனால், ப்ரகார ப்ரகாரிகளுக்குள்ள ஸம்பந்த நியமத்தையேஇது காண்பிக்கும். இந்த ஸமாதாநம் 'ப்ரகாரஸ்யைவ வ்யதிரேகஸம்பந்த:' என்பதிலிருந்து ஏற்படுகின்றது. மூன்றாவது ஹேது 'ஏகப்ரத்யய-விஷயத்வம்' என்பது. இந்த ப்ரத்யயம், இரண்டுக்கும் தர்மி ஒன்றாக இருக்கிறபடியால் ஏற்படுகிறதே தவிர, தர்மியின் ஐக்யத்தால் இல்லை. 'மாடு' என்பதால் கொம்பு ஒடிந்த மாடு கொம்பு இல்லாத மாடு எல்லாம் ப்ரதீதிக்கு இடமானால், அது

அபி ச நிர்விசேஷ வஸ்துவாதிநா ஸ்வயம்ப்ரகாசே வஸ்துநி தத்ராரோபித விசேஷா: சப்தை: ஸகலை: நிவார்யந்த இதி வததா

அபி ச........வததா—அத்வைதிகள் நிர்விசேஷ வஸ்துவை ஸாதிக்கும் பொருட்டு, 'ஸ்வயம் ப்ரகாசமான வஸ்துவின் விஷயத்தில், அதன் மீது ஆரோபிக்கப்படும் விசேஷங்களெல்லாம் ஸகல சப்தங்களாலும் நிஷேதிக்கப்படுகின்றன' [பக்கம் 85] என்று சொன்னார்கள் ; 'அப்படி விசேஷங்களை நிஷேதிக்கும் சப்தங்கள் எவை?'

எல்லா மாடுகளும் ஒன்றே என்பதை எப்படிக் காட்டும்? கொம்பு ஒடிந்திருப்பது கொம்பு இல்லாமல் இருப்பது முதலிய தர்மங்கள் வேறுபட்டனவாக இருந்தாலும் தர்மியாகிற மாடு ஒன்றே என்பதை மாத்ரமன்றோ இது விளக்குகின்றது? இதுவும் 'ப்ரகாரஸ்யைவ' என்பதனால் ஏற்படுகின்றது. நான்காவது ஹேதுவாகிற 'வ்யக்திவிசேஷணத்வேந ஜாதிவ்யக்த்யோ: அபேத ப்ரதீதி:' என்பது ஐக்யத்தைச் சாண்பிக்க மாட்டாது. விசேஷண விசேஷ்ய பாவம் பேதகம். ப்ரதம பிண்டக்ரஹணத்தில் 'இது இப்படிப்பட்டது' என்று ப்ரதீதி ஏற்படுகிறபடியால் விசேஷண விசேஷ்ய பாவத்தின் க்ரஹணம் உண்டு; அந்தக் காரணத்தால் பேதம் க்ருஹீதமாகுமே தவிர அபேதம் க்ருஹீதமாக மாட்டாது.

யாதவ பாஸ்கர மதஸ்தர்கள் சொல்லும் மற்றை யுக்திகள் இவ்விடத்தில் நிரஸிக்கப்படவில்லை. ப்ரதீதி ஸித்தமாக இருக்கிறபடியால் பேதாபேதங்கள் பரஸ்பரம் விருத்தங்கள் அல்ல என்று அவர்கள் சொல்வது நிலைபெறாத வாதம். 'ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று விலக்ஷணமாக இருப்பது அவைகளின் பேதம், அப்படி இல்லாமல் இருப்பது அவைகளின் அபேதம்' என்பதை அறிந்த ஒருவன் இரண்டுக்கும் ஒரே இடத்தில் ஸம்பவத்தை ஒருபொழுதும் சொல்லமாட்டான். இம்மாதிரியே அவர்களுடைய மற்றை வாதங்களும் நிலை பெறமாட்டா என்பதைக் கண்டு கொள்க.

அபி ச—நிர்விசேஷ வஸ்துவுக்கு ப்ரமாணம் இல்லை என்று சொல்லிக்கொண்டுவந்த ப்ரகரணத்தில், ஒருகால் நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்துக்கு நிர்விசேஷ விஷயத்வம் இருக்குமோ என்று சங்கித்து, அந்தச் சங்கையைப் பரிஹாரம் செய்தார் ; ப்ரஸங்காத் பேதாபேத நிரஸத்தையும் செய்தார். இப்பொழுது, அதற்குமுன் ப்ரஸ்துதமாக இருந்த விஷயத்தை எடுத்துக்கொள்ளுகிறார். அத்வைதிகள் நிர்விசேஷ வஸ்து ஸித்தியைச் சொல்லிக்கொண்டு வந்த இடத்தில், "சாஸ்த்ராணி நிர்விசேஷே ஸ்வயம்ப்ரகாசே வஸ்துநி. சப்தா: ப்ரமாண ஸித்தாவஸ்தே" என்று ஆரம்பித்து

‘केन ते सर्वे निर्दिष्टाः?’ इति वक्तव्यम्। “वाचारम्भणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम्” इति विकारनामधेययोः वाचारम्भणमात्रत्वात् यत्तत्र कारणतयोपलक्ष्यते वस्तुमात्रं तदेव सत्यम् अन्यदसत्यमिति श्रुतिर्वदतीति चेन्नैतदे-

---

என்று ப்ரச்னம் செய்யப்பட்டால் அதற்கு அவர்கள் உத்தரம் சொல்லவேண்டியவர்கள். ‘வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்’ என்னும் ச்ருதி வாக்யம், அம்மாதிரி விசேஷங்களை நிஷேதிக்கின்றது என்று ஒருவன் சங்கிக்ககூடும். எப்படி யென்றால், ‘வேறு ரூபம் வேறு பெயர் இவை யெல்லாம் கேவலம் வ்யவஹாரத்திற்காக மாத்ரம் இருக்கிறபடியால் அவைகளுள் எது வஸ்து மாத்ரமாக இருந்துகொண்டு காரணமாகக் காணப்படுகின்றதோ அதுவே பரமார்த்தமானது, மற்றவை யெல்லாம் அபரமார்த்தங்கள்’ என்பதே அந்த வாக்யத்தின் தாத்பர்யம் என்று சொல்லலாம் அப்படிச் சொல்வது உபபன்னமாகாது. அப்படிச் சொன்னால் அது த்ருஷ்டாந்த வாக்யத்-

---

“सर्वैः शब्दैः [illegible] विशेषाः सर्वे निरस्ताः” என்று வேதாந்த வாக்யங்களுக்குப் பேத நிராஸபரத்வத்தை ப்ரஸ்தாவித்து மேல் கொண்டு வாதம் செய்தார்கள். வேதாந்த வாக்யங்களுக்குப் பேத நிராஸபரத்வம் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு அபிமதமன்று. அப்படி இருக்கையிலும், அதை ஒத்துக்கொண்டே அத்வைதிகளின் வாதத்தைக் கண்டித்தார். அப்படி அதைக் கண்டித்துவிட்டு, இப்பொழுது, வேதாந்த வாக்யங்களுக்குப் பேதநிராஸபரத்வமே அநுபபன்னமென்று நிரூபிக்கிறார்.

केन ते सर्वे निर्दिष्टाः इति वक्तव्यम्— ‘அப்படிப் பேதத்தை நிஷேதிக்கும் சப்தங்கள் எவை?’ என்று ப்ரச்னம் செய்தால், அதற்கு அவர்கள் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும். இவ்விடத்தில் ‘சொல்லவேண்டும்’ என்பதன் குறிப்பு ‘அது அவர்களால் அசக்யம்’ என்பதுதான்.

वाचारम्भणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम्— இதில் ‘वाचारम्भणम्’ என்பதற்கு அத்வைதிகள் ‘व्यावहारिकम्’ அதாவது வ்யாவஹாரிகம், (அபரமார்த்தம்) என்று அர்த்தம் சொல்லுகிறார்கள். மண் பிண்டம் ரூபம் மாறி, குடம் மடக்கு முதலியவைகளாக விகாரம் அடைவதும், மண் என்னும்பெயர் மாறி, குடம் முதலிய பெயர் அடைவதும் ஆகிய எல்லாம் அபாரமார்த்திகம், பொய் என்று சொன்னது ஆயிற்று. இந்த அர்த்தம் பூர்வோத்தர அஸங்கதம். ஆகையால் ஸ்ரீ பாஷ்யகாரர் இதற்கு வேறு அர்த்தம் சொல்லுகிறார். அது பூர்வோத்தரத்திற்கு ஒத்திருப்ப-

वपद्यते। ‘एकस्मिन् विज्ञाते सर्वं विज्ञातं भवति’ इति प्रतिज्ञाते अन्यज्ञानेनान्यज्ञानासंभवं मन्वानस्य, ‘एकमेव वस्तु विकाराद्यवस्थाविशेषेण पारमार्थिकेनैव नानासंस्थानवस्थितं चेत् तदेकस्मिन् विज्ञाते तदन्यावस्थितमपि तदेव वस्तु’ इति तत्र दृष्टान्तोपपादनं क्रियते; नात्र कस्यचिद्विशेषस्य निषेधकः कोऽपि शब्दो दृश्यते। वाचारम्भणमिति—वाचा व्यवहारेण; आरभ्यत इति

திற்கு அநுகுணமாக மாட்டாது. ‘ஒன்று அறியப்பட்டால் எல்லாம் அறியப்பட்டதாகி விடும்’ என்று உபதேசம் செய்யப் பட்டவுடன், அது எப்படி என்பதை அறியாத ச்வேதகேதுவுக்காக வன்றோ இந்த த்ருஷ்டாந்தம் நிதர்சிக்கப் பட்டது? அந்த த்ருஷ்டாந்தத்தின் கருத்து என்னவென்றால், ஒரே வஸ்து காரணமாகவும் கார்யமாகவும் பலவித அவஸ்தையில் பரமார்த்தமாகவே இருக்கும் பக்ஷத்தில், அப்பொழுது ஒரு அவஸ்தையுடன் கூடிய அந்த வஸ்துவை அறிந்துவிட்டால், அதைக் காட்டிலும் வேறு விதமான அவஸ்தையுடன் கூடியதும் அந்த வஸ்துவே என்று அறிந்துவிடலாம் என்பதே. இந்த த்ருஷ்டாந்தத்தில் விசேஷங்களை நிஷேதிக்கும் சப்தம் ஒன்றும் காணப்படவில்லை. ‘वाचारम्भणम्’ என்பதற்கு, वाचा—வ்யவஹாரமாகிற ப்ரயோஜனத்தின் பொருட்டு, आरम्भणम्—ஆலம்பிக்கப்படுகின்றது (அதாவது—ஸ்பர்சிக்கப்படுகின்றது) என்பது அர்த்தம். மண், பிண்ட-

---

தையும் அத்வைதிகள் சொல்லும் அர்த்தம் பூர்வோத்தரத்திற்கு அஸங்கதமாக இருப்பதையும் மூலத்திலேயே பார்த்துக்கொள்ளலாம்.

विकाराद्यवस्थाविशेषेण—‘விகாரம்’ என்றால் ‘மாறுதல்’; கார்யமான வஸ்து, காரண வஸ்துவின் விகாரம். ஆகையால், கார்யாவஸ்தை என்றும் காரணாவஸ்தை என்றும் இரண்டு அவஸ்தைகள் உண்டு. இவ்விடத்தில் ‘ஆதி’ என்னும் சப்தத்தால் காரணாவஸ்தை சொல்லப்படுகிறது.

वाचा—व्यवहारेण. இவ்விடத்தில் மூன்றாம் வேற்றுமையின் கருத்து ப்ரயோஜனத்வத்தைச் சொல்வதே; அதாவது-வார்த்தையால் வ்யவஹரிக்கும் பொருட்டு. ‘वाक्’ என்பதால் ‘வார்த்தையாற் செய்யப்படும் வ்யவஹாரம்’ க்ரஹிக்கப்படுகின்றது. வாக்யத்தின் அந்வயம்:—विकारः नामधेयं च (मृद्द्रव्येण) वाचा आरम्भणम्; वाग्व्यवहार[illegible]र्थं [illegible] नामधेय-

186278

ஸம்ஸ்தா²நஞ்ச | விஜ்ஞாநேநைவ ஸ்தி²தாயா ம்ருத்திகாயா நாம ஆக்ருதிஶ்ச வ்யவஹாரார்த்தா²꞉ ; க⁴டஶராவாதி³விஜ்ஞாநேநைவ ஸ்தி²தாயா ஸம்ஸ்தா²நஞ்ச ம்ருத்திகாயா அந்யாநி நாமதே⁴யாநி வ்யவஹாரார்தா²நீத்யர்த²꞉ | தத³பி வஸ்து ம்ருத்திகா த்³ரவ்யமேகமேவ நாநாஸம்ஸ்தா²நம் நாநாநாமதே⁴யாஸ்பத³ம் நாநாவ்யவஹாராஸ்பத³ஞ்சேத்யேவ ஸத்யமித்யுக்தமித்யர்த²꞉

மாகிற அவஸ்தையில் இருக்கும்பொழுது ஒரு பெயரையும் ஒரு ரூபத்தையும் உடைத்தாயிருக்கின்றது; அந்த மண்ணே, குடம் மடக்கு முதலிய அவஸ்தையிலிருக்கும் பொழுது வேறு பெயர்களையும் வேறு ரூபங்களையும் உடைத்தா யிருக்கின்றது. அப்படி இருக்கையிலும், எல்லா அவஸ்தைகளிலும், மண் என்னும் ஒரே த்ரவ்யம் பலவித ரூபங்களாலும் பலவித பெயர்களாலும் பலவித வ்யவஹாரத்திற்காக ஸ்பர்சிக்கப்படுகிறது என்பதே பரமார்த்த மாதலால், ஒன்றின் ஜ்ஞானத்தால் மற்றொன்றின் ஜ்ஞானத்தின் ஸம்பவம் உபபந்நமாகும் என்பது நிரூபிக்கப்பட்டதாகின்றது. இவ்விடத்தில் எவ்வித

ஸ்ப்ருஶ்யதே ; ம்ருத்பிண்ட³ ஏவ நாமரூபவாந் ப⁴வதி இத்யர்த²꞉ | வார்த்தையால் வ்யவஹரிக்கும் பொருட்டு மண் பிண்டத்தால் பெயரும் ரூபமும் தொடப்படுகின்றன ; அதாவது-மண் பிண்டமே வேறு நாமரூபங்களை அடைகின்றது என்று சொன்னதாயிற்று. 'ஆரப்⁴யதே' என்பதற்கு 'ஸ்ப்ருஶ்யதே' 'தொடப்படுகின்றது' என்று அர்த்தம்.

விஜ்ஞாநேந—பெயரும் ரூபமும் மாறினால் வேறொரு த்ரவ்யம் உண்டாகின்றது என்று வைசேஷிக மதஸ்தர்கள் சொல்லுகிறார்கள். அப்படி இல்லை; பெயரும் ரூபமும் மாறின போதிலும் வஸ்து ஒன்றே என்று சொல்லுகிறார் நம் ஸ்ரீ பாஷ்யகாரர்.

ஒன்றின் ஜ்ஞானத்தால் மற்றவைகளின் ஜ்ஞானம் ஏற்படுகின்றது என்பது ப்ரகரணம். 'காரணவஸ்தையும் கார்யாவஸ்தையும் வேறு என்றாலும், வஸ்து ஒன்றே' என்று சொல்வதால், ஒரு அவஸ்தையிலுள்ள வஸ்துவின் ஜ்ஞானத்தால் மற்றொரு அவஸ்தையிலுள்ள அதே வஸ்துவின் ஜ்ஞானம் ஏற்பட்டதாகின்றது என்பது ஸித்திக்கிறது. ஆகையால், இந்த அர்த்தமே ப்ரகரணத்திற்கு ஒத்தது. இந்த அர்த்தத்தில் பேத நிஷேதமொன்றும் ஏற்படவில்லை யாகையால், இந்த வாக்யத்திற்கு பேத நிராஸ பரத்வம் இல்லை என்பது ஸித்திக்கின்றது.

அபி ச—பேத நிராஸ பரத்வம் இல்லை என்பதற்கு மற்றுமொரு காரணம் சொல்லுகிறார்.

ஶப்³தா³ந்தரஸம்ஸ்தா²நாந்தரஸம்ஸ்தா²வோ நிர்தி³ஷ்ட꞉ | தத்ர கிம் மித்²யா நிஷித்⁴யத இதி வாக்யோபக்ரமே ப்ரஶ்நஸம்ப⁴வ꞉ |

அபி ச "யேநாஶ்ருதம் ஶ்ருதம்" இத்யாதி³நா ப்³ரஹ்மவ்யதிரிக்தஸ்ய ஸர்வஸ்ய மித்²யாத்வம் ப்ரதிஜ்ஞாதம் சேத், "யதா² ஸோம்யைகேந ம்ருத்பிண்டே³ந" இத்யாதி³ த்³ருஷ்டாந்தா꞉ ஸாத்⁴யவிகலா꞉ ஸ்யு꞉ ; ரஜ்ஜுஸர்பாதி³வந்ம்ருத்திகாவிகாரஸ்ய க⁴டஶராவாதே³ரஸத்யத்வம் ஶ்வேதகேதோ꞉ ப்ரத்யக்ஷாதி³ப்ரமாணேந யுக்த்யா வா அஸித்³த⁴மிதி | ஸத³பி விவக்ஷிதமிதி சேத் யதே²தி த்³ருஷ்டாந்ததயா உபாதா³நம் ந க⁴டதே |

"ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீத் ஏகமேவாத்³விதீயம்" இத்யத்ர "ஸதே³வ" "ஏகமேவ" இத்யவதா⁴ரணத்³வயேந "அத்³விதீயம்" இதி

விசேஷமும் நிஷேதிக்கப்படவில்லை என்னும் அர்த்தம் ஏற்கெனவே விஸ்தாரமாக உபபாதநம் செய்யப்பட்டிருக்கின்றது.

அபி ச........க⁴டதே—தவிரவும், "யேநாஶ்ருதம் ஶ்ருதம்" என்பது முதலான வாக்யங்களால், 'ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்ற எல்லாம் பொய்' என்பது ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கின்றது என்னில், "யதா² ஸோம்யைகேந ம்ருத்பிண்டே³ந" என்பது முதலான த்ருஷ்டாந்தங்கள் நிஷ்ப்ரயோஜநமாகிவிடும். ஏனென்றால், உபதேசம் செய்யப்படும் ச்வேதகேதுவுக்கு, ப்ரத்யக்ஷமாகிற ப்ரமாணத்தாலாவது யுக்தியினாலாவது, மண்ணின் விகாரமாகிற குடம் மடக்கு முதலியவைகள், கயிற்றில் தோன்றும் ஸர்ப்பம்போல, அஸத்யங்கள் என்று ஒருபொழுதும் ஏற்படவில்லை. அப்படி ஏற்படுவதே இவ்விடத்திற் செய்யப்படும் உபதேசத்தின் தாத்பர்யம் என்றால், "யதா²" என்று த்ருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டுவது ஒவ்வாது.

ஸதே³வ........ஸம்ப⁴வதி—ஒருகால் "ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீத் ஏகமேவாத்³விதீயம்" என்னும் வாக்யத்தில் காணப்படும் 'ஸதே³வ' 'ஏக

ஸதே³வ—ஒருகால் இந்த வாக்யம் பேதத்தை நிராகரிக்கின்றதோ என்று சங்கித்துப் பரிஹரிக்கிறார்.

அவதா⁴ரண—'ஏவ' என்பதற்கு அவதா⁴ரணம் என்று பெயர்.

தேந அ வஸ்தாந்தராபத்தி ஸஜாதீய விஜாதீய ஸ்வகத விஶேஷ நிஷேத இதி வ்யர்த்தமிதி சேத் நைதத் ஏவம் । காயகாரணயோ: வஸ்த்வவஸ்தாபேத ஸகலவஸ்து ஸதா ஸகாரணவஸ்தாவஸிதவஸ்து ஜ்ஞாநேந அவஸ்தாந்தரவஸிதஸ்யாபி ஜ்ஞாததாம் ப்ரதர்ஶநேந ப்ரதிஜ்ஞா ஸ்வேதகேதோ: அஜ்ஞாதம் ஸர்வகாரண பூதம் ப்ரஹ்மகாரண த்வம் ச வக்தும் "ஸதேவ ஸோம்யேதமக்ர" இத்யாரப்த: । "இதம்" "அக்ரே" "ஸதேவ" "ஆஸீத்" இதி । "அக்ரே" இதி காலவிஶேஷ: । "இதம்" ஶப்தவாச்யஸ்ய ப்ரபஞ்சஸ்ய ஸதாபத்திரூபோ க்ரியா விஶேஷம் ஸ்துதம் ச வததி । "ஏகமேவ" இதி ஆஸ்ய ஸ்தாதாதானேவ

மேவ' ஆகிய இந்த இரண்டு அவதாரணங்களாலும், 'அத்விதீயம்' என்னும் பதத்தாலும், கேவலம் ஸத்தாகமாத்ரம் இருக்கும் வஸ்துவில் ஸஜாதீயம் விஜாதீயம் முதலான பேதங்களெல்லாம் நிஷேதிக்கப்படுவனவாகத் தோன்றுகின்றது என்னில், அதுவும் பொருந்தமாக மாட்டாது. ஏனென்றால், இந்த வாக்யம், 'ப்ரபஞ்சத்தில் தென்படும் ஸகல வஸ்துக்களுக்கும் ப்ரஹ்மமே காரணம் என்று விளக்குவதற்கன்றோ ஆரம்பிக்கப்பட்டது? கார்யாவஸ்தையிலும் காரணாவஸ்தையிலும் இருக்கிற ஒரு வஸ்துவின் விஷயத்தில், ஒரு அவஸ்தையில் இருப்பதை அறிந்து விட்டால், வஸ்து ஒன்றாக இருக்கிறபடியால் மற்றொரு அவஸ்தையில் இருப்பதும் அறியப் பட்டதாகி விடுகின்றது என்பதை, த்ருஷ்டாந்தத்தைக் கொண்டு உபபாதித்து விட்டு, பிறகு, ச்வேதகேதுவுக்குத் தெரியாமல் இருக்கும் ப்ரஹ்ம காரணத்தன்மையைச் சொல்ல பிதா ஆரம்பிக்கிறார். இந்த வாக்யத்தில் காணப்படும் "இதம்", "அக்ரே", "ஸதேவ" "ஆஸீத்" என்னும் பதங்களைக் கவனிக்க வேண்டும். "அக்ரே" என்னும் பதத்தால் கால விசேஷம் ஒன்று குறிக்கப் படுகின்றது; "இதம்" சப்தத்தால் சொல்லப்படும் ப்ரபஞ்சத்திற்கு ஸதாபத்தி ரூபமான ஒரு க்ரியா விசேஷத்தை "ஆஸீத்" என்னும் சப்தம் குறிக்கின்றது; அந்த ப்ரபஞ்சம் ஸத்தான த்ரவ்யமே என்பதை "ஸதேவ" என்பது சொல்லுகின்றது; அந்தக் கால விசேஷத்தில் இந்த ப்ரபஞ்சம்

'இதம்' 'அக்ரே' 'ஸதேவ' 'ஆஸீத்' இந்தச் சப்தங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விசேஷத்தைக் குறிக்கின்றது என்பதைக் காண்பிக்க இவைகள் இவ்விடத்தில் க்ரஹிக்கப்படுகின்றன.

ஸ்ரீ ஜிதந்தே ஸ்தோத்ரம்

ஜிதந்தே

ஜிதந்தே புண்டரீகாக்ஷ நமஸ்தே விஶ்வபாவந ।
நமஸ்தேஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ ॥ 1 ॥

ஸ்ரீ:

(ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்.)

ஸ்ரீமத்க்ருஷ்ண ஸமாஹ்வாய நமோ யாமுந ஸூநவே ।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ்ஸதா ॥

"ஜிதந்தே" யாவது ருக்வேத கிலம்; தத்வ ப்ரதிபாதகபரமான ஸ்ரீ புருஷ ஸூக்தம் ஸர்வ ச்ருதிகளிலு மோதிப்போருமாப்போலே, இதுவும் ஸ்ரீ சாஸ்த்ரத்திலும் இதிஹாஸ புராணங்களிலேயும் மஹாமந்த்ர மென்று திருமந்த்ரத்தோபாதி பரம ரஹஸ்யமாகச் சொல்லிப் போருமதொன்று. வேதாக்ஷரராசியால் பௌருஷேயமான இதிஹாஸ புராணங்களிலே எழுதிப்படித்துப் போருவானென்னென்னில், கிலமாகிறது அப்

ஸ்ரீ:

(ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி வ்யாக்யானம்.)

நமோ ஸ்ரீக்ருஷ்ணதேவாய நம: க்ஷீராப்திஶாயிநே ।
ஜிதந்தாக்யஸ்தவஸ்யேஹ ஜ்ஞாநதீபஸ்ய ய: ॥

ஸ்ரீ ஜிதந்தே ஸ்தோத்ரமானது ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும் இதிஹாஸ புராணங்களிலும் மந்த்ரம் என்கிற சப்தத்தினாலும் பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளில் "ஜிதந்தாஹ்வயமந்த்ர:" என்று 'மந்த்ர' சப்தத்தினாலும் சொல்லப்படுகிற படியினால், இது ருக் வேதத்தின், கிலமென்றும் ச்வேத த்வீப வாஸிகளான மஹர்ஷிகள் க்ஷீராப்தி நாதனுடைய ஸௌலப்யாதி குணங்களில் தோற்று ஈடுபட்டுச் செய்யும் ஸ்தோத்ர மாகையினாலும், இது, ஸ்தவ ப்ரியனான ஈச்வரனுக்கு ப்ரியமானபடியினாலே ஸ்தோத்ர மென்றும் சொல்லப்படுவதாயும், முன்பு ஒரு காலத்தில் ஸ்ரீ நாரத மஹர்ஷியானவர் ஸ்ரீ க்ஷீராப்தி நாதனை ஸேவிக்க ஆஸைப்பட்டு ச்வேத த்வீபத்திற்கு எழுந்தருளினவாறே அங்கு ப்ரம்ஹ புத்ரர்களான ஏகதர், த்விதர், த்ரிதர் என்கிற மூன்று மஹர்ஷி

ரஹஸ்யம் ஸ்தர்கம் ; ஸூத்ரகாரர்கள் இல ஸஹிதமாகத் தாங்கள் அத்யயநம் பண்ணிப் போந்தவர்களாகையாலே ஸ்மார்த்த விதாநங்களிலே மந்த்ரமாக விநியோகித்துப் போரா நின்றார்களிறே. இப்படி இதிஹாஸ புராணங்களிலே ஸ்ரீ சாஸ்த்ரத்திலே " ஜிதந்தே புண்டரீகாக்ஷ " என்று மந்த்ரமாக விநியோகித்துப் போருமதொன்று.

ச்வேத த்வீப வாஸிகள் க்ஷீராப்திநாதனுடைய ஸௌந்தர்யாதிகளிலே தோற்றிட்டுச் சொல்லும் ஸ்தோத்ரம் ; இதுக்கு ஸ்தோத்ரத்வமும், ஸ்தவப்ரியனுக்கு ப்ரியதமத்வ மாகை.

ப்ரஹ்மாதிகளுக்குத் துஷ்ப்ராபமான ஸ்தலத்திலே தோன்றினவிது இதிஹாஸ புராணங்களிலே எழுதிப் படிக்கும்படி ஸுலபமானபடி என்னென்னில்:—இம்மந்த்ரத்துக்கு ப்ரதிபாத்யனான க்ஷீராப்தி நாதனைத் திருவடித்தொழ வாதரித்து ஸ்ரீ நாரத பகவான்

கள் தபஸ் செய்வதைக் கண்டு, 'எந்த உபாயத்தினால் க்ஷீராப்தி நாதனை ஸேவிக்க முடியும்?'' என்று கேட்க, அவர்கள் "இங்கு வஸிக்கும் மஹர்ஷிகள் ஸ்ரீ க்ஷீராப்தி நாதனை ஸேவிக்கும் போதெல்லாம் 'ஜிதந்தே' என்றொரு ஸ்தோத்ரத்தைச் சொல்லித் திருவடி தொழுகிறார்கள் ; அதை நாங்கள் உமக்கு உபதேசிக்கிறோம் ; நீரும் அதையே அநுஸந்தித்திரும்''என்று உபதேசிக்க, ஸ்ரீ நாரதரும் அதை க்ரஹித்து அநுஸந்தித்துக்கொண்டு, ஜயந்தமென்னும் க்ஷேத்ரத்தில் தபஸ் பண்ணுகிற ப்ரம்ஹாவினிடம் இந்த வ்ருத்தாந்தத்தைச் சொல்ல, பரம்ஹாவும் 'ஜிதந்தே' ஸ்தோத்ரத்தை ஸ்ரீ நாரத மஹர்ஷியிடம் உபதேசித்துக்கொண்டு தாம் செய்தருளின புராணாதிகளிலே சேர்த்து நிபந்தித்து, புத்ர சிஷ்யாதிகளுக்கு உபதேசித்துப் போந்த படியினாலே ச்வேத த்வீபத்தில் அவதரித்த இந்த 'ஜிதந்தே' ஸ்தோத்ரம் எல்லாரும் அநுஸந்திக்கும்படி ஸுலபமாயிற்றென்றும் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்தார். இது அவதார க்ரமம்.

இக்கலியுகத்தில் அல்பாயுஸ்களாயும் அல்ப புத்தி சக்தி யுள்ளவர்களாயும் இந்த ஸ்வல்ப கால புத்தி சக்திகளையும் கூட விபரீத விஷயங்களிலே செலவழித்து, அதிதுர்லபமான மாநுஷ்ய ஜந்மாவை வீணாக்கி வருகிற நாம், யாதாமொரு யாத்ருச்சிக ஸுக்ருத மூலமான ஸத்ஸங்காதிகளால் ஜந்ம ஜரா மரணாதிகளுக்குப் பயந்து ஆத்ம க்ஷேமத்திற்கு அநுகூலமான தத்வ ஜ்ஞாந விவேகாதிகளை உபதேசிக்கும் ஸதாசார்ய மூலமாய் விஸ்தாரமில்லாத சுருக்கமும் ஸரளமுமான ஸ்ரீ ஸூக்திகளை ஸேவித்துத் தெளிந்து ஈச்வரனை

ச்வேதத்வீபத்திலே சென்றவளவிலே ஏகத த்வித த்ரிதர்கள் தபஸ் பண்ணிக்கொண்டு இருக்க, இவர்களுக்கும் கிட்டவொண்ணாத விஷயத்தை நம்மால் காணமுடியாதென்று மீண்டு அவர்களைக்குறித்து "எனக்குச் செய்யவடுப்பதென்'' என்று கேட்க, "இத்திருமாளிகைக்குள்ளே ச்வேத த்வீபவாஸிகள் க்ஷீராப்தி நாதனைக் கண்டு பண்ணும் ஸ்தோத்ரம், கேட்டோமே நாங்கள் தபஸ் பண்ணுகிறோமாகையால், ஜ்ஞாதவ்யமாயிற்று. எங்கள் பக்கலிலே இத்தை லபித்து அநுஸந்தி'' என்ன, அவனும் அவர்கள் பக்கலிலே " ஜிதந்தே " ஸ்தோத்ரத்தை லபித்துப் போரா நிற்க, ஜயந்த மென்கிற பர்வதத்திலே பகவதுபாஸநம் பண்ணுகிற ப்ரஹ்மாவை வந்து அநுவர்த்தித்துப் பிறந்த வ்ருத்தாந்தத்தை அவனுக்கு விஜ்ஞாபிக்க, "எனக்கு அந்த ஸ்தோத்ரத்தைச் சொல்'' என்று ஸ்ரீ நாரத பகவான் பக்கலிலே க்ரஹித்தான் சதுர்முகன்; அவன் பக்கலிலே புக்கதாகையாலே இதிஹாஸ புராணங்களிலே எழுதப்பட்டு பகவத் பரராயிருப்பாரெல்லார்க்கும் லபிக்கும்படி ஸுலபமாயிற்று; இது ஜிதந்தேயினுடைய அவதாரம்.

ஆச்ரயித்து க்ருதார்த்தனாவோம் என்று நினைக்கு மவனுக்கு 'ஸ்ரீ ஜிதந்தே' ஸ்தோத்ரமே முக்யமாக உபாதேயமான ஸ்ரீ ஸூக்தியாகக் கடவது. ஏனென்றால், "நமோ நாராயணாய" என்று அதன் மஹிமை யறிந்த மஹர்ஷிகளால் ஸர்வோத்க்ருஷ்டமாகச் சொல்லப்படும் திருமந்த்ரம், 'ஸர்வ வேத ஸாராணாம்' என்கிறபடியே ஸர்வ சாஸ்த்ரார்த்த கர்ப்பிதமாகவிருந்தாலும், எட்டுத் திருவக்ஷரமாய் அதி ஸம்க்ஷிப்தமாக இருக்கையினாலே மந்த மதிகளான நமக்கு சரண்ய குணாதிகளை ஸுகமாகத் தெரிவித்து, அதனால் ஈச்வரனிடத்தில் மஹா விச்வாஸாதிகளை உண்டாக்கி, ஆச்ரயிக்கச் செய்து, முமுக்ஷுக்களோடு நம்மைச் சேர்க்கச் சக்த மன்று.

அப்படியே " அபசேஷாத் ஸாமாந்யாதேவ ஸர்வ ப்ரஸித்வம் வக்தா " என்று ஸர்வ காலமும் அநுஸந்தேயமாகச் சொல்லப்படும் மந்த்ர ரத்நாதிகளும் சாஸ்த்ரார்த்தங்களைக்கொண்டு ஸ்ரீ சரண்ய குணாதிகளைத் தெளிந்து அவனை ஆச்ரயித்தவனுக்கு இங்கு வாழ்நாள்களில் விபரீதாநுபவம் வாராதபடி ஸர்வதா இம்மந்த்ரார்த்தத்தின் அநுஸந்தாநம், வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போது போக்கினதற்கு ஸமாநமென்றபடி. அல்லது இம்மந்த்ர ரத்நமே மூடர்களுடைய மோஹத்தைப் போக்கித் தத்வங்களைத் தெளிவிக்கக்கூடிய பூர்ணோபதேசத்திற்குப் போதுமானதாக மாட்டாது.

இது தன்னுடைய உள் வாயை அநுஸந்தித்தால் ப்ரபத்திக்கு வ்யாக்யானமாயிருக்கிறது. ப்ராப்ய ப்ராபகங்களிரண்டையும் சொல்லுகிறது. "ப்ரபத்திக்கு அதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்தி பரவசரும் என்று த்ரிவிதர்" என்று பட்டருளிச் செய்தாரிறே.

« [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ »

அஜ்ஞனாகிறான் பகவல்லாபத்துக்குத் தன் பக்கலிலே ஜ்ஞான சக்த்யாதிகளில்லாதவன்; ஸர்வஜ்ஞனாகிறான் "தேசகால வஸ்துக்களாலே பரிச்சேதிக்க வொண்ணாத

« [illegible] »

என்கிறபடியே பகவதவதார கதா வ்யாஜத்தினால் வேதார்த்தங்களை விஸ்தாரமாகச்சொல்லும் ராமாயண பாரதாதிகள் அதிக விஸ்தாரமாக அருளிச்செய்யப்பட்டிருப்பதால், தாரணா சக்தி சூந்யமாய் விசேஷத: விஸ்மரணமும் ஸ்வபாவமான நமது மனத்தில் அவ்விதிஹாஸ கதைகள் தரித்திருக்கமாட்டா. தவிர அவ்விதிஹாஸோத்தமங்களையும் ஆபாதசூடம் அநுபவித்துப் பார்த்தால், 'சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவா' திரிந்த பாவிகளின் கதையால் பூர்ணமாய், பின்னும் 'புலன்படிந்துண்ணும் போக' ஹேதுவான விஷய விஷார்ணவ வர்ணநமாய், அதனுள் புகுந்து பார்க்கும் புத்திமான்களுக்கும் புலப்பட வரிதான சிற்சில பகவத் குணங்களை அருமருந்தாக்கி யறிவிப்பதால் அவ்விதிஹாஸ கதைகளை ஆயிரம் தடவையாய் வாசித்துக் கேட்டாலும், சூதாடித் தோற்றதும் சூர்ப்பணகை பங்கமுமே நமது நெஞ்சில் ஸ்திர ப்ரதிஷ்டிதமாகி, மஹர்ஷிகள் மொழிந்திட்ட முக்தி மார்க்கமெல்லாம் மின்னொளி மாத்ரமாய் மறைந்து போய் விடுகிறபடியினால் மந்தமதிகளான நமது உஜ்ஜீவநத்துக்கு அவை உபகாரகமாகமாட்டா. இதுபோலவே மற்றுமுள்ள மஹர்ஷிகளின் ஸூக்திகளில் சில ஸம்க்ஷிப்தங்களாயும், சில விஸ்தார்த்தங்களாயு மிருப்பதால் அவைகள் அல்ப புத்திகளான நம்மால் ஆதரிக்கத் தகாதவைகளேயாம். இந்த 'ஜிதந்தே' ஸ்தோத்ரமோ வென்றால் காம க்ரோத கதா ப்ரஸங்க சூந்யங்களாய், க்யாதி லாப பூஜா நிரபேக்ஷர்களாய், 'உண்ணும் சோறும் பருகு நீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்' என்கிறபடியே பகவத் குணாநுபவைக தாரக

வைபவத்தையுடையவன் ஈச்வரன்" என்றிருக்கையாலே அநந்ய ஸாத்ய னென்றிருக்குமவன்; பக்தி பரவசனாகிறான் ஜ்ஞாந சக்த்யாதிகளுண்டாயிருக்கச் செய்தேயும் அவை வுபட அநுஷ்டிக்கமாட்டாதவன். இவர்கள் மூவரும் பகவத்விஷய மொழிய வேறு உபாயமுண்டென்றறியாதவர்கள். இவர்களுக்கு ப்ராபகனுமாய் ப்ராப்யனுமாயிருக்கும் ஸர்வேச்வரனென்று 'ஜிதந்தே' என்று பேரையுடைத்தான மந்த்ர ரஹஸ்யத்தை ஸர்வஜ்ஞனை சௌநக பகவான் வ்யாக்யாநம் பண்ணப் பெறுவதே! என்கிறார். "[illegible]" என்றும் "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே த்வயத்துக் கதிகாரியாவான், ஈச்வரனுக்கே அநந்யார்ஹ சேஷபூதனுவானிறே. இப்படிப்பட்ட சேஷத்வத்தையுடைய விவ்வாத்மாக்கள், அநாதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே அறியாதே ஈச்வரனுடைய ஸ்வாமித்வ ஸ்வாதந்த்ர்யங்களைத் தங்கள் தலையிலே யேறிட்டுக்கொண்டு ஆத்மாபஹாரிகளாய் வர்த்திப்பார்கள். ஆத்மாபஹாரமாவது அஹங்கார மமகாரங்கள். « [illegible] »

போஷக போக்யர்களான பாக்யவான்கள் ஸ்ரீ [illegible] நாதனை அநுபவித்து அடங்காமல் வழிந்து வந்த வார்த்தை யாகையாலே வக்த்ரு வைலக்ஷண்ய விசேஷமுள்ளதாய், "[illegible]" என்கிறபடியே செவிக்கினிய செஞ்சொல்லாய், அஜ்ஞ தமர்களுக்கும் அநாயாஸமாக அறிந்திசையலாம்படியான அதி ஸரள சப்த ஸந்தர்ப்ப மயமாய், கேட்டுணர்ந்த கடிந ப்ருக்ருதிகளும் நெஞ்சுருகிக் கண் பனிசோர்ந்து மெய் சிலிர்த்து வாய் புலற்றும்படியான ஸாது சப்த கும்ப மாகையினாலே வசந வைலக்ஷண்ய விசேஷ முள்ளதாய், நகரச் சிறப்பென்னும் பொய் செறிந்த சொற்களும் காமப் புலம்பலையும் கோபக் கொடுமையையும் குறிப்பிட்டு விஷய வர்ணந மென்னும் வீண் வார்த்தை யில்லாது அசரண்ய சரண்யனுடைய கல்யாண குணாம்ருத ஸாரமயமாய், ஆத்மோஜ்ஜீவநார்த்திகளுக்கு அவச்யாபேக்ஷிதங்களான அர்த்த பஞ்சகாதிகளைப் பரக்கப் பேசுகிறதாய், ஆச்ரிதரைக் காப்பாற்றும் கருணையால் பாற்கடலில் கண்வளரும் அவ்வாராவமுதனைக் கண்ணாரக் கண்டநுபவித்து வாயார வாழ்த்தின ஸூக்திகளாகையினாலே விஷய வைலக்ஷண்யமும் விஞ்சி யிருப்பதால் இவ்வைலக்ஷண்யங்களின் வாசி யறிந்த நம் பூர்வாசாரியர்கள் அனைவரும் இதையே விசேஷமாக ஆதரித்து அநுஸந்தித்துப் போந்தார்கள்.

இப்படி இந்த 'ஜிதந்தே' ஸ்தோத்ரமானது பேச வரிதான பெருமையுடனிருந்து, ஸர்வேச்வரன் திருவுள்ளத்துக்கு மிக்க உகப்பாயிருப்பதாலன்றோ ஸர்வஜ்ஞர்களான அநந்த கருட விஷ்வக்ஸேநாதி நித்யஸூரிகளும் கூட 'ஜிதந்தே' மந்த்ரத்தைக் கொண்டே ஸர்வேச்வரனை ஸதா ஸ்தோத்ரம் செய்வதாக "[illegible]" என்று ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் அபீதிஸ்தவத்தில் அருளிச் செய்திருக்கிறார்.

என்றும் "உ௵தீ அஜ்ஞோ ஏதது:" என்றும் சொல்லுகிறபடியே "யானே என்னை யறிகிலாதே யானே என்றனதே என்றிருந்தேன்" என்றிறே அபியுக்தர் வார்த்தையும்; பாபங்களிலே தலையான பாபமும் இவ்வாத்மா பஹாரமே. "யொ உதழா வஹரோதாறு" இத்யாதிகளிலே ஸ்புடம். பாபத்துக்கு ப்ராயச்சித்தம், இவ்வாத்மா பகவச்சேஷ மென்றால் விவாதம் பண்ணுகிருக்கை. "தெந தெவிவா தவெ" என்றும், "உம்முயிர் வீடுடையானிடை வீடு செய்மினே" என்றும், "கெஷஜ்ஞவொழஹ ஜாதாயிமஷூ: வாரீ தா" என்றும் சொல்லக் கடவதிறே. ஈச்வரன், இப்படி அஹங்கார மமகார க்ரஸ்தராய் சப்தாதி விஷய ப்ரவணராய், அதிலே "வாவெஹவா௦ஜோஉஜ கிஉதொ உயவஷிதெ" என்றும் "ஜியா ஹஜெயஉவெவும் ந நவெயம் த கவாதிக" என்றமிருக்கும் ஹிரண்ய ராவணாதிகளைப் போலே தன்னோடே எதிரம்பு கோத்து நிற்கிற வாத்மாக்களைப்

இந்த 'ஜிதஜெ' ஸ்தோத்ரத்தில் முதல் ச்லோகத்தினால் சுருக்கமாகச் சொல்லப்பட்ட ப்ராப்ய ப்ராபக தத்வங்களை மேல் எல்லாக்ரந்தங்களும் விவரிக்கின்றன வென்று ஸ்ரீ பட்டரும், முதல் இரண்டு ச்லோகத்தினாலே ப்ராப்ய ப்ராபகங்களைச் சொல்லி மேல் ச்லோகங்களாலே அதற்கடியான ஈச்வரனுடைய சரண்யதையைச் சொல்லுகிறதாகமற்றும் சில ஆசார்யர்களும் அருளிச் செய்தார்கள்.

இதில் ஸர்வ சாஸ்த்ரார்த்தங்களும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், அகிஞ்சனோபாயமான சரணாகதியும் அதற்கு உபயுக்தங்களான சரண்யகுணாதிகளும் அவற்றின் பயனுமே முக்யமாகச் சொல்லப்படுவதால், த்வயத்திற்போல இந்த 'ஜிதஜெ' மந்த்ரத்திலும் பூர்வார்த்தம் உபாயமான சரணாகதி ப்ரதாநமாய், உத்தரார்த்தம் உபேயமான அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்ட ப்ராப்தி ரூப பல ப்ரதாநமாகச் சொல்லுகிறதென்றும், இந்த ச்லோகத்துடன் சேர்க்கப்பட்டதான மேலுள்ள ஸ்ரீ பாஞ்சராத்ர க்ரந்தங்கள் இந்த அர்த்தங்களையும் மற்றும் இந்தச் சரணாகதிக்கு அபேக்ஷிதார்த்தங்களையும் சொல்லுகின்றன வென்றும் சொல்வது மிகவும் ஸங்கதமாகும்.

அன்றிக்கே ஸ்ரீ பாரதத்தில் சாந்திபர்வத்தில் 344-ம் அத்யாயத்தில் ச்வேத த்வீப வாஸியான பகவானை அநுபவிக்கும்பரமைகாந்திகள், 'ஜிதம்தெ' என்கிற ஸ்தோத்ரத்தைச் சொல்லி ஆராதநம் செய்வதாகச் சொல்லப்படுவதால் "நஉ உதெவ வாஷிந:" என்றும் "வநக ஹாவ உத வதா:" என்றும் சொல்லப்படுகிற தந்மயர்களான மஹர்ஷிகள் பாற்கடற் சேர்ந்த பரமனுடைய திருமேனியின் திவ்ய தேஜஸ் ஸௌந்தர்யாதிகளைக் கண்ணாரக் கண்டு அநுபவித்து அடங்காத அதிக ப்ரேமபந்தத்தாலுண்டான அஸ்தாந பயசங்கையினால் 'ஜிதம் தெ வ-ணூரீகாக்ஷ' வென்று பெரியாழ்வாரைப் போலப் பல்லாண்டு பாடின பாசுரமிது என்று நிர்வஹிப்பது பாரதத்தின் பூர்வோத்தர க்ரந்தங்களுக்கு அநுகுணமாகும்.

பார்த்தருளி, "இவை சாஸ்த்ர மார்க்கங்களாலே திருத்தவொருப்பட்டதல்ல; இவர்களுடைய விஷய ப்ராவண்யமே பற்றாசாக நம்முடைய வழகுகளையும் சீலாதி குணங்களையும் காட்டித்திருத்துவோம்"என்று வழியிட்டு, ப்ரதமத்திலே ருசி ஜநகனாய், ருசி பிறந்தார்க்கு உபாயமுமாய், அதிலே நிஷ்டரானார்க்கு ப்ராப்யனுமாயிருக்கும்படியைச் சொல்லுகிறது இப்ரபந்தம்.

ப்ராப்ய ப்ராபகங்களை முதல் ச்லோகத்திலே ஸங்க்ரஹமாகச் சொல்லி மேலில் ச்லோகங்களாலே விஸ்தரிக்கிறதென்று பட்டர் நிர்வாஹம். முதலிரண்டு ச்லோகத்தாலே ப்ராப்ய ப்ராபகங்களைச் சொல்லி மேலில் ச்லோகங்களாலே அதுக்கடியான சரண்யதையைச் சொல்லுகிறதாகவுமாம். சரண்யதையை முதலில் சொல்லி உபாயோபேயங்களைச் சொல்ல ப்ராப்தமாயிருக்கப் பின்பே சரண்யதையைச் சொல்லுவானென்னில், "முனியே நான்முக"னிலே திருவாணையிட்டுப் பின்பு அது பெருவாணையல்லாமை ஸாதித்தாப்போலே இதுவென்று திருநறையூரரையர் நிர்வாஹம்.

அன்றிக்கே, நற்குணப் பெருக்கினால் புகழ் வாய்ந்த வேந்தரை வாழ்த்துகிற வந்திகள், 'ஜயஜய' வென்று ஆரம்பித்து ஸ்துதிக்குமாப்போல "ராஜாதிராஜ ஸர்வேஷாம் ஷாமூ" என்கிறபடியே 'பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற' செங்கோலுடைய ஸ்ரீய: பதியை ருக்வேத புருஷனான வந்தியானவன், 'ஜிதம் தெ' என்று ஆரம்பித்து வாழ்த்துகிறான் என்பதும் வைதிக மர்யாதைக்குப் பொருத்தமாகும். ஸ்ரீ பகவதம் ச்ருதி கீதையில் வேதபுருஷன் "ஜய ஜய ஜஹ்யஜாம்" என்று ஸ்துதித்திருப்பது ப்ரஸித்த மன்றோ?

இவ்விடத்தில் ஸ்ரீ பாரதம் சாந்திபர்வம் 344-ம் அத்யாயத்தில் ச்வேத த்வீப வாஸிகளான மஹர்ஷிகள் 'ஜிதஜெ' என்கிற ஒரு ச்லோகத்தைச் சொல்லிப் பரமாத்மாவை ஆராதித்ததாகச் சொல்லியிருப்பதாலும், ஸ்ரீ பட்டர் "ஜிதஜாஹவயஉஜெ:" என்று ஏகவசனமாக அருளிச்செய்திருப்பதாலும். "ஜிதஜெ உதி ஊ௦ஜெ" என்று மற்றும் ஏகவசநாந்தமாக ப்ரயோகங்களிருப்பதாலும், 'ஜிதஜெ' என்கிற முதல் ச்லோகம் மட்டும் ருக்வேத மந்த்ரமாய் மேல் ஐந்து அத்யாய ச்லோகங்க ளெல்லாம் ஸ்ரீமந் நாராயணனால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ பாஞ்சராத்ராந்தர்க்கதங்கள் என்பது பெரியோர்களின் அபிப்ராயம்.

உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி

நகை வர்த்தகர்கள்.




தொழிற்சாலை.

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை

காட்சி அறை

25, சைனபஜார் ரோட், மதராஸ்.

நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து கொடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கொண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் கியாரண்டி கொடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.



காட்லாக்குக்கு எழுதுங்கள்.



முதல் ச்லோகத்தாலே ப்ராப்ய நிஷ்கர்ஷ பர்யந்தமாக விவன் ப்ரார்த்திக்கும் படியாக ஈச்வரன் தன்னழகாலே தோற்பித்துக் கொண்டபடியைச் சொல்லுகிறது. 'ஜிதமெ' "யாதேனும் பற்றி நீங்கும் விரதம்" என்கிறபடியே விஷயாந்தரங்களைப் பற்றி, 'எம்பெருமான் முகத்தில் விழியேன்" என்று இவன் வ்ரதம் கொண்டிருக்க, ஈச்வரன் "தானொட்டிவந்து" என்கிறபடியே விஷயாந்தரங்களில் துவக்கை யறுத்து ஸ்வரூப ஜ்ஞாநத்தையுண்டாக்கி "அவச்யம் உம்மைக் கொண்டல்லது விடேன்" என்று வ்ரதம் கொண்டு யாத்ருச்சிகமாக இவன் விஷயாந்தரங்களிலே நெகிழ நின்றவளவிலே "இருந்தான் கண்டுகொண்டு" என்கிறபடியே தன்னழகைக் காட்டி ஜயித்து, இவன் தோற்றமைகண்டு பரீதனாய் 'தோற்றீரார்" என்று கேட்டருள, "தோற்றோம் மடநெஞ்ச மெம்பெருமான் நாரணற்கு" என்கிறபடியே "ஜயஹூவ" என்கிறான். த்ருதீயார்த்தே ஷஷ்டியாய் உன்னாலே ஜயமென்னுதல். பாவெ நிஷ்டையாய் உன்னுடைய ஜயமென்னுதல், பந்த மடியான ஸங்

'ஜிதம் தெ'—இங்கு முதல் ச்லோகத்தில் அநாதிகாலமாக அஜ்ஞாநாந்தகாரத்தில் அகப்பட்டு விஷயார்ணவ பங்க நிமக்நரான விவேக ஹீந சேதநரையுங் கூடத் தன் வடிவழகைக் காட்டி மோஹிப்பித்து மீட்கைக்காக ஸர்வேச்வரன் அவதார தசையிலும் அல்லலி லின்பமெவிறந் தெங்கு மழகமர்ந்த திருமேனியுடன் அவதரித்தருளுகிறான் என்கிற விஷயம் சொல்லப்படுகிறது. தத்வோபதேசத்திற்குச் செவிதாழ்க்க இசையாத இவ்விபரீதர்களை ஹிதோபதேசம் பண்ணித் திருப்பவொண்ணாதிறே! ஜிதமெ—'யாதானும் பற்றி நீங்கும் விரதம்' என்கிறபடியே விஷயாந்தரங்களைக் கைப்பற்றி எம்பெருமான் திருமுகத்தில் விழியேனென்று வ்ரதம்கொண்ட சேதநனைப் பார்த்து இவன் புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி நலமந்த மில்லதோர் நாடுபுகுவதென்னுனோ'வென்று நெஞ்சம் கரைந்து நைந்த ஸர்வேச்வரன் 'தானொட்டிவந்தென் தனிநெஞ்சம் வஞ்சித்து' என்கிறபடியே இச்சேதநனைக் கிட்டி உம்முடைய விஷய ப்ரவணதையைப் போக்கி உம்மைக் கொண்டாலல்லது விடேனென்று வ்ரதங்கொண்டு வ்யாஜ ப்ரதீக்ஷனாயிருக்க, இவனும் யாத்ருச்சிகமாய் ஓரளவிலே அவ்விஷயாந்தரங்களில் நின்று நெகிழ நிற்றதைக் கண்டு, "ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம் । ராமம் த்ருஷ்ட்வா … " என்கிறபடியே மஹர்ஷிகளும் மயங்கி மோஹிக்கும்படியான தன் திருமேனி யழகைக் காட்டியருள, மஜ்ஜா மேதோமயமான ப்ராக்ருதபிண்டத்தைக் கண்டு முன்பு மோஹித்தவனுகையினாலே அப்ராக்ருதாச்சர்ய தேஜோமயமான திருமேனியின் திவ்ய ஸௌந்தர்யத்தைக் கண்டு மதிமயங்கித் தோற்றுத் திருவடியின் கீழே விழுந்த இச்சேதநனை விசேஷ கடாக்ஷம் பண்ணியருளின ஸர்வேச்வரன் 'தோற்றீரார்' என்று கேட்டருள, இச்சேதநனும், 'தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு' என்கிறபடியே 'ஜிதம் தெ' தேவரீருடைய ஜயம் என்கிறான். ஸர்வநாம சப்தமான 'தே' என்கிற இத்தால் ஸர்வசக்

18678

விற்பனைக்குத் தயார்

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யாநத்துடன் கூடியது

விலை அணா 0 10 0

மற்றும் கீழ்கண்ட புஸ்தகங்களும் விற்பனைக்குத் தயார்.

ஸ்ரீ ஸச் சரித்திர ரக்ஷை (தமிழ் மொழி பெயர்ப்புடன்)	0	14	0
ஸ்ரீ பரமபதஸோபானம் (தமிழ் வியாக்கியானத்துடன்)	0	8	0
ஸ்ரீ நம்மாழ்வார் வைபவம்	0	4	0

இப்புத்தகங்கள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

காரியதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை,
திருவல்லிக்கேணி, சென்னை.

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.

தலைவலி — இருமல்
நரம்புவலி — ஜலதோஷம்
முதுகுவலி — நெருப்புக்காயம்
இடுப்புவலி — காயங்கள்
கீல்வாயுவு — சுளுக்குகள்

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

பம்பாய் அமிருதாஞ்சனம் டிபோ, மதராஸ்.

இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை காரியதர்சியால் வெளியிடப்படுவது.